பக்கங்கள்:-29

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 30 | ஞாயிற்றுக்கிழமை | 13.04.2025 | அதிர்வு 251

## சஜித்தை டெல்லிக்கு அழைக்கின்றார் மோடி



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை டெல்லிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் 06

# தென்னக்கோன் மீதான விசாரணைக்கு உரிய குழுவை நியமிக்க நடவடிக்கை!



முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் குழுவில் உறுப்பினர்களை நியமிக்குமாறு பிரதம நீதியரசர் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சபாநாயகர் கடிதம் எழுதியுள்ளார்.

நிலையியற் கட்டளைகளின்படி, பிரதம நீதியரசர் இந்தக் குழுவிற்கு ஒரு நீதியரசரை நியமிக்க வேண்டும். அவரே மூன்று பேர் கொண்ட விசாரணக்குழுவின் தலைவராகச் செயற்படுவார்.

அதே வேளை தேசிய பொலிஸ் ஆணையத்தின் தலைவர் ஒரு பிரதிநிதியையும், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இணைந்து மற்றொரு நிபுணரையும் பரிந்துரைக்க வேண்டும். 06






# ஈஸ்டர் தாக்குதல் பற்றிய விசாரணைகள் ஆரம்பம்!

## கிண்ணியாவில் நேற்று ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

(ஏ.எச். ஹஸ்பர்)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரனைகளை ஆரம்பித்துள்ளோம். விரைவில் உண்மைகள் வெளியாகும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபை மைதானத்தில் நேற்று மாலை இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 07

# புத்தாண்டு பிறந்ததும் அமைச்சரவை மாற்றம்?



தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டின் பின்னர் நிகழக்கூடிய சாத்தியம் 06

## குருநாகல் - புத்தளம் வீதியில் விபத்தில் 2 இளைஞர்கள் பலி




(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் – புத்தளம் வீதியில் லக்மல் உயன பிரதேசத்தில் 06




சுமார் 250 பேரின் உயிர்களைப் பலி வாங்கி, 500 பேர் வரை படுகாயம் அடைய வைத்த ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்று இன்னும் எட்டு நாள்களில் ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகப் போகின்றன.

இந்த ஆறாம் ஆண்டு நினைவு நாளுக்கு முன்னர் இந்தத் தாக்குதல்கள் தொடர்பான சூத்திரதாரிகளுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அன்றைய தினத்தில் அரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் களமிறங்குவோம் என்று இந்த தாக்குதல்களினால் அதிகம் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் சார்பில் திருச்சபைப் பிரதிநிதி கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்து இருந்தார்.

அந்த நினைவு நாள் நெருங்கும் சமயத்தில், இப்போது அவரிடமிருந்து சத்தம் சந்தடியோ, பிரதிபலிப்போ இன்னும் வெளிப்படவில்லை.

நேற்றுக் கிண்ணியாவில் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கு பற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அந்தத் தாக்குதல் 06

# தண்டப்பத்திரத்தைத் தமிழில் தருமாறு கோரிய சாரதியை கழுத்தைப் பிடித்து இழுத்து ஓட்டோவில் ஏற்றிய பொலிஸ்

## வவுனியாவில் போக்குவரத்துப் பொலிஸார் நேற்று அடாவடித்தனம்




(வவுனியா நிருபர்)

வவுனியா, குருமன்காடு சந்தியில் வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் தமிழ் மொழியில் தண்டப் பத்திரம் கோரிய சாரதியின் தலையைப் பிடித்து இழுத்து, கையைப் பிடித்து அமுக்கி, முறுக்கி ஓட்டோவில் ஏற்ற முற்பட்டமையினால் அவ்விடத்தில் சற்று பதற்ற நிலைமை காணப்பட்டது.

நேற்று இடம்பெற்ற இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வாகனச் சாரதி ஒருவர் வர்த்தக நோக்கத்திற்காக குருமன்காடு சந்தியில் வாகனத்தை நிறுத்தியுள்ளார். இதன் போது வாகனத்தினை அவ்விடத்திலிருந்து அகற்றுமாறு போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், வர்த்தக நிலையத்திற்கு பொருள்களை இறக்குவதினால் சிறிது நேரம் கால அவகாசம் தருமாறு வாகன சாரதி கோரிய சமயத்தில் போக்குவரத்துப் பொலிஸார் வாகனத் திறப்பை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

இதன் போது வாகனத்தினை நிறுத்த தடை செய்யப்பட்ட இடத்தில் வாகனத்தை நிறுத்தியமை என சிங்கள மொழியில் பொலிஸார் தண்டப்பத்திரம் வழங்கிய சமயத்தில் தமக்கு என்ன குற்றம் எனத் தெளிவில்லை, எனவே தமிழ் மொழியில் தண்டப் பத்திரம் தருமாறு சாரதி கோரியமையினால் அவருக்கும் போக்குவரத்துப் பொலிஸாருக்குமிடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவ்விடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமைக்கு இடையூறு எனத் தெரிவித்து அந்த வாகன சாரதியை ஓட்டோவில் பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச் செல்ல முற்பட்ட சமயத்தில் அவ்விடத்தில் பதற்ற நிலமை ஏற்பட்டது.

எந்த தவறும் செய்யாது என்னை எவ்வாறு கைது செய்ய முடியும், மேலும் அவ்வாறு தவறு செய்தால் தண்டப் பத்திரம் தானே வழங்க வேண்டும் என வாகன சாரதி கூறி, ஓட்டோவில் ஏற மறுப்பு தெரிவித்தமையையடுத்து போக்குவரத்துப் பொலிஸார் அந்த வாகன சாரதியினை தலையைப் பிடித்து இழுத்து, கையை பிடித்து அமுக்கி, ஓட்டோவில் ஏற்றி வவுனியா பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

வாகன சாரதி மீது வவுனியா போக்குவரத்து பொலிஸார் வழக்கு தாக்கல் மேற்கொண்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைத்துள்ளனர்.

# ‘விசுவாசுவ’ வருடப்பிறப்பு சுப நேரம்!

தமிழர்களின் முக்கியமான பாரம்பரிய பண்டிகைகளில் தமிழ் புத்தாண்டு ஒன்றாகும். இது பொதுவாக ஏப்ரல் 14 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

இது சூரியப் பொங்கல் காலத்துக்குப் பின் வரும், சூரியன் மேஷ ராசிக்குள் நுழையும் நாளாகும். இதை “சித்திரை திருநாள்” என்றும் அழைக்கிறார்கள். தமிழ் நாள்களில் இது சித்திரை மாதத்தின் முதல் நாளாகும். அதனால் இந்த நாள் தமிழ்ப் புத்தாண்டாகக் கருதப்படுகிறது.

திருக்கணித பஞ்சாங்கம் - 13.04. 2025 ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 3.21 மணிக்கு விசுவாவசு வருடம் பிறக்கின்றது.

வாக்கிய பஞ்சாங்கம் - 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 2.29 மணிக்கு விசுவாவசு வருடம் பிறக்கின்றது.

விஷு புண்ணியகாலம் - 13.04. 2024 ஞாயிறு இரவு 10.29 மணி முதல் 14.04.2024 திங்கட்கிழமை காலை 6.29 மணி வரை.

ஆடை நிறம் - சிவப்பு, வெள்ளை.

கை விஷேடம் பரிமாறும் நேரம் - திருக்கணித பஞ்சாங்கம் - 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 06.05 முதல் 07.10 மணி வரை, காலை 09.05 முதல் 09.55 வரை.

கை விஷேடம் பரிமாறும் நேரம் - வாக்கிய பஞ்சாங்கம் - 14 திங்கட்கிழமை பகல் 09 .09 மணி முதல் 09.56 மணி வரை, பகல் 9.59 மணி முதல் 10.31 மணி வரை, மாலை 4.06 மணியில் இருந்து 5 மணிவரை.

தோஷ நட்சத்திரங்கள் - திருவாதிரை, சித்திரை, சுவாதி, விசாகம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களை கொண்டோர் தவறாமல் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். மேலும் இந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் தான, தர்மம் செய்து, சங்கிரம தோஷ நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.




# 14 நிர்வாக மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி நிறைவு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு 14 நிர்வாக மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன என அரச அச்சகம் தெரிவித்தது.

ஒரு கோடியே 10 லட்சம் வாக்குச்சீட்டுக்கள் இதுவரை அச்சிடப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 11 மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் நிறைவடையும் என அரச அச்சகர் பிரதீப் புஷ்ப குமார தெரிவித்தார்.

50 வீத தபால் வாக்குச்சீட்டுகள் கிடைக்கப்பெறவுள்ளதாக தபால் மாஅதிபர் பீ. சத்குமார தெரிவித்துள்ளார்.




# கடந்த சில நாள்களில் 1,200 சோதனைகள்

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கடந்த சில நாள்களில் மாத்திரம் 1,200 சோதனைகளை முன்னெடுத்ததாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்தது.

எதிர்வரும் நாள்களில் அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பான சோதனைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அதிகாரசபை குறிப்பிட்டது.

விற்பனைப் பொருள்களின் விலைகளைக் காட்சிப்படுத்தாதவர்கள், அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்பவர்கள், பொருள்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை மாற்றுபவர்கள், காலாவதியான பொருள்களை விற்பனை செய்பவர்கள், பற்றுச்சீட்டுக்களை வழங்காதவர்கள் தொடர்பிலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நிபந்தனைகளுடன் பொருள்களை விற்பனை செய்தல், நுகர்வோரை தவறாகவழிநடத்தும்வகையில்விலைகுறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

சம்பா, கீரி சம்பா அரிசி வகைகளை அதிகவிலைக்குவிற்பனைசெய்யும்வியாபாரிகள் மற்றும் முட்டை, கோழி இறைச்சியை அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகார சபை தெரிவித்துள்ளது.



# பண்டிகை காலத்தில் கவனத்துடன் செயற்படுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

பண்டிகை காலத்தில் வெளியூர் மற்றும் தூர இடங்களுக்கு பயணிப் போர் மிகுந்த அவதானத்துடன் வாக னம் செலுத்துவது அவிசயமானது என சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதன் மூலம் திடீர் விபத்துக்களை தவிர்க்க முடியுமென சுகாதார அமைச்சு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

கடந்த காலத்தில் புத்தாண்டின் போது 28,000 முதல் 30,000 வரையிலான வர்கள் விபத்துக்கள் காரணமாக வைத்தி யசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர் என விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்தார்.

பண்டிகை காலத்தில் ஏற்படும் விபத் துக்களினால் 75 முதல் 100 பேர் வரை உயிரிழந்தனர் என பதிவாகிய தரவுகள் காணப்படுகின்றன என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இதனால் வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறும் பாதுகாப்பான இடங்க ளில் விடுமுறையை களிக்குமாறும் வைத்தியர் அறிவுறுத்தியுள்ளார்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை தொடர்ந்தும் அதிகரிப்பு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 778,843 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள் ளது.

இதன்படி, இந்த மாதத்தின் கடந்த 9 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 56,567 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்தே அதிகச் சுற்றுலாப் பயணிகள் வந் துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

இந்தியாவில் இருந்து 10,595 பேரும், பிரித்தானியாவில் இருந்து 7,679 பேரும், ரஸ்யாவில் இருந்து 6,163 பேரும் நாட்டுக்கு வந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதி கார சபை தெரிவித்துள்ளது.

# 20 நாள்களுக்குள் 1,121 முறைப்பாடுகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு முதல் 20 நாள்களுக்குள் 1,121 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

06 வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறிய 1,062 முறைபாடுகளும் அவற்றில் உள்ளடங்குக்கின்றன என ஆணைக்குழு குறிப்பிட்டது.

கிடைத்த முறைப்பாடுகளில் 996 முறைபாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.







# புன்னாலைக்கட்டுவனில் விபத்தில் முதியவர் சாவு

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் பாடசாலைக்கு அருகாமையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன், மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் ஒருவர் பின்னால் வந்து மோதி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த கந்தவர்ணம் செல்வநாயகம் என்ற 62 வயதான முதியவரின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பலாலி கிழக்கு வசாவிளான் பகுதியினை சேர்ந்தவர் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்தின் அடிப்படையில் உழவு இயந்திரத்தின் சாரதியான 27 வயது இளைஞர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் என்று கூறி இருக்கிறார்.

இந்தத் தாக்குதல் நடந்து இந்த ஆறு வருடத்தில் இது நான்காவது அரசு. ஏற்கனவே மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க என மூன்று ஜனாதிபதிகளின் ஆட்சிகள் கடந்து போய்விட்டன. இப்போது நான்காவது ஜனாதிபதி வந்து பதவி ஏற்று, ஆறு மாதங்கள் முடிந்த பின்னர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் என்கிறார்.

ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் விசாரணைகள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை இல்லை என்றால் எதிர்ப்பு போராட்டம் வெடிக்கும் என்று மிரட்டல் விட்டுச் சீறிய கர்த்தினாலோ அடக்கி வாசிக்கிறார்.

இதே சமயம் இந்த ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கும் இப்போது கைதாகியிருக்கும் பிள்ளையானுக்கும் தொடர்பு இருக்கின்றது எனப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவிக்கின்றார்.

இவற்றைக் கூட்டிக் கழித்துப் பார்க்கின்ற போது, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையில் முக்கிய சூத்திரதாரியாக பிள்ளையானைக் கைது செய்து விட்டோம் என்பதைக் காட்டி காய் நகர்த்த அல்லது காலத்தை இழுத்தடிக்க ஆளுந்தரப்பு தீர்மானித்து விட்டதோ என்ற சந்தேகம் பார்வையாளர்களுக்கு எழாமல் இல்லை.

\+ \+ \+

ஒரு நகரத்திலிருந்து தூர இடத்துக்கு அலுவலகப் பணிக்கு செல்பவர்கள் கூட்டாக தங்களுக்குள் ஒழுங்குப்படுத்தி ஒரு பஸ்ஸையோ, வாகனத்தையோ அலுவலக நாள்களில் பணிக்குச் சென்று வருவதற்குப் பயன்படுத்துவது உண்டு.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைதீவின் ஒரு பகுதிக்கு பணியாற்றச் செல்பவர்கள் ஒரு சிறிய பஸ்ஸையோ வாகனத்தையோ அவ்வாறு ஒழுங்குப்படுத்தி வேலை நாள்களில் போய் வரப்பயன்படுத்துவது வழமை.

ஆனால் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து அலுவலகப் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் இத்தகைய பஸ்கள் தற்காலிக அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடுபட முடியாது என்றும், அவ்வாறு சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வடக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் பாகம் III இன் பிரிவு II, பிரிவு 44 மற்றும் 2016ஆம் ஆண்டின் முதலாம் இலக்க வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இது விதிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவித்துள்ளார்.

இச் சரத்தானது வீதிப் போக்கு வரத்து அனுமதி பெற்று சேவையில் ஈடுபடும் ஒரு பஸ், அனுமதி அற்ற தடத்தில் அல்லது அன்றைய அனுமதி இல்லாது ஓடும் போது அந்த பஸ்களை கட்டுப்படுத்தும் சரத்தே அன்றி, அதிகார சபையில் பதிவற்ற பஸ்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் சரத்து அல்ல. அத்தகைய எந்தவொரு அதிகாரமும் தற்போதுள்ள நியதிச் சட்டத்தின் பிரகாரம் சபைக்குக் கிடையாது.

ஆனால் ஓட்டோக்களுக்கு மீற்றர் பூட்டுமாறு பல நூறுபேர் பத்து ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வரும் சூழலில் அதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. அதற்கான சட்ட அதிகாரம் இருந்தும் அதைச் செய்வதற்கு வக்கற்ற வடக்குப் போக்கு வரத்து அதிகார சபை, தனக்கு இல்லாத அதிகாரத்தைத் தலையில் தூக்கிப்போட்டு, அலுவலக ஊழியர்களின் தனிப்பட்ட ஒழுங்குபடுத்தலிலான பஸ்களுக்கு ஆப்படிக்க முயல்கின்றது.

எமது நாட்டில்தான் தமக்கான அதிகாரத்தை விட்டு விட்டு, இல்லாத அதிகாரத்தை தலையில் தூக்கிப்போட முயலும் 'நட்' கழன்ற வேலைகள் எல்லாம் தாராளம்...!

## புத்தாண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமைச்சரவை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்களை தற்போதைய நாள்களில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா வழிநடத்தி வருகின்றார் எனத் தெரிய வருகின்றது.

தற்போது கூடுதலான அமைச்சுப் பொறுப்புகளை வைத்திருக்கும் அமைச்சர்களின் பொறுப்புகள் புதியவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

அதன் பிரகாரம் அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது. தற்போதைக்கு பிரதி அமைச்சராக இருக்கின்ற இளம் அரசியல்வாதியொருக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

## தென்னக்கோன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அதன்படி, இந்த குழு அடுத்த வாரம் தனது விசாரணையை

தொடங்கும் என்று அறியப்படுகிறது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஒரு குழுவை நியமிக்கும் பிரேரணை கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் 151 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

விசாரணையை முடித்த பிறகு, இந்தக் குழு சபாநாயகரிடம் முழு அறிக்கையையும் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் அறிக்கையை ஆய்வு செய்த பிறகு, தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சஜித்தை டெல்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார். இதன் போதே டெல்லி விஜயத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் சுமார் 30 நிமிடங்கள் வரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், இந்த தருணத்தில் இலங்கைக்கு எத்தகைய உதவியை இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கின்றீர்கள் என்று பிரதமர் நரேந்திர மோடி, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்த சஜித் பிரேமதாஸ, கொவிட் பெருந்தொற்றின் போதும், அதன் பின்னரான பொருளாதார நெருக்கடியின் போதும் இந்திய உதவி கிடைத்திருக்காவிடின் இலங்கையால் இந்தளவு சீக்கிரம் மீண்டிருக்க முடியாது, எனவே, எதிர்வரும் நாள்களிலும் பொருளாதாரத்தில் இருந்து மீள்வதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். ஆகவே, இலங்கைக்கு ஆதரவாக இந்தியாவின் தொடர் ஒத்துழைப்பு அவசியம் என கோரிக்கை விடுத்தார்.

இதன் பின்னர் டெல்லிக்கு விஜயம் செய்யுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுத்தார் மோடி. சந்திப்பில் பங்கேற்றிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் விஜயத்திற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு பிரதமர் மோடி இதன் போது ஆலோசனை வழங்கினார்.

## குருநாகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் என வாரியப்பொல பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகலில் இருந்து வாரியப்பொல நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வாரியப்பொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

21 வயதுடைய இரண்டு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



## ஈஸ்டத் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு தொடர்ந்தும் கூறியவை வருமாறு :-

தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்படுகிறது.

கடந்த காலங்களில் திகண, மாவனல்லை எனப் பல பிரச்சினைகள் உருவாகின.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிபீடமேறி ஆறு மாதங்களாக அவ்வாறான பிரச்சினைகள்

எதுவும் இல்லாமல் வாழ்கிறீர்கள்.

இதற்காக அனைவரும் நாட்டை கட்டியெழுப்ப ஒற்றுமையாக பயணிக்க வேண்டியுள்ளது. எனவேதான் இம் முறை தேர்தலில் கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச சபை அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குங்கள்.

பலர் சமூக ஊடகங்களில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். இவர்களைப் பார்த்தால் பின்னால் "மரம்" உள்ளது. அம்பாறையில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவானார்கள். நால்வரும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இதனைக் கருத்திற் கொண்டு தேசிய மக்கள் சக்தி கட்சித் தீர்மானத்துக்கு அமைவாக ஆதம்பாவை தேசிய பட்டியல் ஊடாக எம்.பியாக்கி முஸ்லிம் சமூகத்தை கௌரவப்படுத்தியுள்ளோம்.

இனவாதப் பிரச்சினைகளை இந்த நாட்டில் உருவாக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்காது.

2019 இல் ஈஸ்டர் தாக்குதலால் 250க்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகின. 500க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இதனால் முஸ்லிம் சமூகத்தவர்கள்பெரும்துன்பத்தைஎதிர்கொண்டார்கள். அது பற்றிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த கால ஆட்சியாளர்கள் நாட்டை நாசப்படுத்தியுள்ளார்கள். எரிபொருள் இல்லை. எரிவாயு இல்லை. கடன் சுமை. இப்படி பல இடர்களை நாடு சந்தித்தது. தற்போது பொருளாதாரத்தை மீட்டுள்ளோம். இதனையடுத்து அரச சேவையை மீள் எழுச்சி பெறவும் மக்களுக்கு திறந்த - சிறந்த - சேவைகளை வழங்கவும் அரசாங்க துறையில் சம்பள உயர்வை ஏற்படுத்தியுள்ளோம். ரூபா 38,000 பெற்ற ஒருவர் ரூபா 63,000 வரை பெறுகிறார். ரூபா 54,000 பெற்ற வைத்தியர் ரூபா 94,000 பெறுகிறார். இதற்காக இந்த வருடம் 11 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 30,000 உத்தியோகத்தர்களை அரச துறையில் ஆள் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இது போன்று அரசாங்க கொடுப்பனவுகளான அஸ்வசும நலன்புரி சேவை, முதியோர், சிறு நீரக கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும் நான்கு இலட்சம் புதிய அஸ்வெசும பயனாளர்களை இணைக்கவுள்ளோம். - என்றார்.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசின் பின்னடிப்பு

எதிரணித் தரப்பில் இருந்த போது என்ன விடயங்களின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி பெரிதாகக் குரல் எழுப்பியதோ அதற்கு முற்றிலும் நேர்மாறான போக்கையே அது இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் கைக்கொள்கின்றது.

எதிரணியில் இருந்த போது இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக இப்போதைய தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினர் பண்ணிய அடாவடித்தனம் மறக்கக் கூடியவையோ அல்லது மறுக்கக் கூடியவையோ அல்ல. அந்த ஒப்பந்தத்துக்கு எதிராக ஆயுதமேந்தி தெற்கில் அராஜக அடாவடித்தனம் பண்ணியவர்கள் அத்தரப்பினர்.

அந்தச் சமயத்தில் இலங்கை - இந்திய பாதுகாப்பு விடயங்களை உள்ளடக்கிய அந்த ஒப்பந்தத்தை அது கைச்சாத்தாவதற்கு முன்னர் வெளிப்படுத்தவில்லை என்பதும் ஜே.வி. பியினரின் குற்றச்சாட்டாக இருந்தது. ஆயினும் அந்த ஒப்பந்தம் கைச்சாத்தானதும் அது மக்கள் பிரதிநிதிகளின் கைகளுக்கு கிடைத்தது.

இப்போது தேசிய மக்கள் சக்தி அரசு கடந்த வாரத்தில் கொழும்பு வந்திருந்த இந்திய பிரதமரின் அணியுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. ஆனால் அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் இது வரை வெளியாகவில்லை. வெளிப்படுத்தப்படவில்லை.

முடியுமானால் அதனை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு ‘சர்வஜன பலய’ கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜெயவீர, தேசிய மக்கள் சக்தி அரசுக்கு சவால் விடுத்திருக்கிறார்.

“கடந்த சில நாள்களில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியப் பிரதமர் மோடியுடன் ஏழு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் குறித்து அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டார். இருப்பினும், அவற்றின் உண்மையான உள்ளடக்கம் குறித்து எந்த தகவலையும் வழங்க அவர் தவறிவிட்டார். அதற்கு பதிலாக, மேற்படி விவரங்களைத் தேடுபவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். அப்படிப்பட்ட ஆலோசனையை நாடாளுமன்றத்திலேயே அவர் வழங்கினார்”- என்று திலித் ஜெயவீர கூறுகின்றார்.

“இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை ராஜதந்திரக் காரணங்களுக்காக வெளியிட முடியாவிட்டால், அரசாங்கம் அதை ஒப்புக்கொண்டு வெளிப்படுத்துவதற்கான குறைந்த பட்ச முதுகெலும்பையாவது கொண்டிருக்க வேண்டும்.” - என்று அவர் சுட்டுவது சரியானதே.

அமைச்சர் விஜித ஹேரத் கூறியமை போன்று மேற்படி பாதுகாப்பு ஒப்பந்தம் உட்பட்ட உடன்படிக்கைகளில் உள்ள விடயங்கள் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரம் கோரினால், அவை பாதுகாப்புச் சம்பந்தமான விடயங்கள், அதனால் விவரம் தர முடியாது எனப் பதில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசு வெளிப்படுத்த முடியாத பின்னடைவான விவகாரங்கள் எவையோ அந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருக்கின்றது என்பதுதான் அரசின் பின்னடிப்பிலிருந்து எழும் ஐயமாகும்.

# பண்டிகை காலத்தில் மரக்கறி விலை அதிகரிப்பு



தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் கேள்விக்கேற்ற விநியோகம் இல்லாமையின் காரணமாக உள்நாட்டுச் சந்தையில் மலையக மற்றும் தாழ் நிலப் பகுதிகளில் விளையும் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, போஞ்சி ஒரு கிலோகிராம் 600 - 700 ரூபா வரையிலும். கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 600 ரூபா, ஒரு கிலோகிராம் கரட்டின் விலை 400 ரூபா, நுவரெலிய உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமின் விலை 600 ரூபா, ஒரு கிலோகிராம் தக்காளி 800 ரூபாவுக்கும், ஏனைய அனைத்து மரக்கறிகளும் 400 ரூபா முதல் 500 ரூபா வரையிலும் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேங்காய் ஒன்றின் விலை 180 ரூபாயிலிருந்து 220 ரூபா வரை சில்லறைக்கு விற்பனை செய்யப்படுவதுடன், ஒரு கிலோகிராம் புளி மற்றும் சீனி வாழைப்பழம் 160 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக நிலவிய தொடர் மழையின் காரணமாகவும் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

# பொருளாதார வளர்ச்சி 3.9 சதவீதம்: ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வுகூறல்




இலங்கையின் இவ்வாண்டு பொருளாதாரம் 3.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்யும் என ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வுகூறியுள்ளது.

அதேவேளை அமெரிக்காவினால் விதிக்கப்பட்டிருக்கும் தீர்வை வரிகள் தொடர்பில் கருத்துவெளியிட்டிருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான சிரேஷ்டபொருளியலாளர் லிலியா அலெக்சன்யன், அமெரிக்காவினால்விதிக்கப்பட்டிருக்கும்தீர்வைகளுக்கு விலக்களிக்கப்படக்கூடும். அல்லது பேச்சுவார்த்தைகள் ஊடாக அவ்வரி அறவீட்டு வீதத்தைக் குறைத்துக்கொள்ளமுடியும். அதன்மூலம் சகலரும் குறைந்தளவிலான தாக்கங்களுக்கே முகங்கொடுக்க நேரும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று இலங்கையின் நிதியியல் மற்றும் நாணயக்கொள்கை முகாமைத்துவம் சிறப்பானதாகக் காணப்படுவதாகவும், அதனூடாக வெளியகக் கடன் பெறுமதி மற்றும் பணவீக்கம் என்பன குறைவடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்காஃபுமி கடொனோ, இந்த அடைவுகளுக்கு மத்தியிலும், இலங்கையின் மீட்சி இன்னமும் நலிவான நிலையிலேயே இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தற்போது பெருமளவுக்குப் பெரும்பாகப்பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், நீண்டகால அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சிக்கு தற்போதைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது அவசியமாகும்.

அதுமாத்திரமன்றி உலகளாவிய வர்த்தக அழுத்தங்கள் உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கு பிராந்திய ஒத்துழைப்பை விரிவுபடுத்திக்கொள்வது இன்றியமையாததாகும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்லர் என்கிறார் அமைச்சர் விஜித ஹேரத்

## யாழில் தமிழில் உரையாற்ற அவர் முயற்சி

நாங்கள் சந்தர்ப்பவாதிகள் அல்லர். எந்த வித பேதங்களும் இல்லாத ஒரு தாய் பிள்ளைகளே.

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணத்தில் வைத்து தமிழில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தஅமைச்சர்விஜிதஹேரத்அமைச்சுதுறைசார்ந்த நிகழ்வுகளிலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் கலந்துகொண்டிருந்தார்.

இதன் போது தனக்கும் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும் எனக் கூறி பல இடங்களிலும் சிறிது நேரம் தமிழ் மொழியிலேயே உரையாற்றியிருந்தார்.

“யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள நான் இங்கு தமிழில் பேசவே விரும்புகிறேன். எனக்கும் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும். ஆகையினால் தமிழில் கொஞ்சம் உரையாற்றிவிட்டு தொடர்ந்து சிங்களத்திலும் கதைக்கிறேன்.

“எனக்கு தமிழ் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். அதனால் தமிழில் பேச விரும்புகிறேன். எங்களுக்கு இன, மத, சாதி பேதமிஎல்லை.

“நாங்கள் எல்லோரும் ஐக்கியப்பட வேண்டும். ஏனெனில் நாங்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகளே. நாங்கள் சந்தர்ப்பவாதிகள் இல்லை.“

– இவ்வாறு தமிழில் உரையாற்றிய அமைச்சர் எங்களுக்குள் பேதங்கள் இல்லமல் ஒருதாய பிள்ளைகளாக ஐக்கியத்துடன் வாழ வேண்டும் என்றார்.

# ரூ.200 கோடி பெறுமதி ஹெராயின், ஐஸூடன் ஆறு மீனவர்கள் இழுவைப் படகுடன் சிக்கினர்!



நேற்று அதிகாலை நாட்டின் மேற்குக் கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின் போது பல நாள் மீன்பிடி இழுவைப் படகு ஒன்று தடுத்து நிறுத்தப்பட்டது.

அதிலிருந்து இரண்டு பில்லியன் (இருநூறு கோடி) ரூபா பெறுமதியான 100 கிலோகிராம் ஹெராயின் மற்றும் ஐஸ் எனப்படும் படிக மெத்தம்பேட்டமைன் ஆகியவற்றை இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது.

உளவுத்துறை தகவல்களின்படி, கடற்படை அதிகாரிகள் குழு கடல் நடவடிக்கையை மேற்கொண்டு, இலங்கையின் மேற்குக் கடல் எல்லைக்குள் படகைக் கைப்பற்றியது.

தடுத்து நிறுத்தப்பட்ட படகு நேற்றுப் பிற்பகல் டிக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது, அங்கு விரிவான சோதனையில் படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 100 கிலோகிராம் ஹெராயின் மற்றும் ஐஸ் கண்டுபிடிக்கப்பட்டன.

தெவுந்தர பகுதியைச் சேர்ந்த படகில் இருந்த ஆறு மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். இந்தக் குழு திருகோணமலைப் பகுதியிலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காகப் புறப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் கைப்பற்றப்பட்ட ரோதைப்பொருள்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.





# இரவு விடுதியில் கூரை இடிந்து வீழ்ந்ததில் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

இரவு விடுதியில் கூரை இடிந்து வீழ்ந்ததில் 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என டொமினிகன் அரசாங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவத்திற்கான காரணம் தொடர்பில் அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்படவில்லை.

எவ்வாறாயினும் மேற்படி விபத்து தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் குழு தொடர்ந்தும் விசாரணை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்கு பின்னர் இசை நிகழ்ச்சியொன்றின் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

4,500 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் மீட்புப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர் என சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டன.

# கோப்பியின் விலை கணிசமாக அதிகரிப்பு



அமெரிக்காவில் கோப்பியின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரிக் கொள்கை காரணமாக ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் கோப்பி இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு விதிக்கப்பட்ட வரிகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

கோப்பி இறக்குமதிக்காக ஆண்டுதோறும் அமெரிக்கா சுமார் 100 பில்லியன் அமெரிக்க டொலரை செலவிடுகின்றது.

இதில் அதிக அளவான கோப்பி பிரேசில் மற்றும் கொலம்பியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அமெரிக்க சந்தையில் கோப்பியின் விலை சுமார் மூன்று டொலர் அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை அமெரிக்க ஜனாதிபதி பல நாடுகள் மீது விதித்த வரிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், அமெரிக்க சந்தையில் அனைத்து நுகர்வோர் பொருள்களின் விலைகளும் ஏற்கனவே அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சிறைக்கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு சந்தர்ப்பம்

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்றும் நாளையும் சிறைக்கைதிகளை பார்வையிட உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

கைதி ஒருவருக்கு போதுமான திண்பண்டங்கள், உணவு, சுகாதார பொருட்கள் அடங்கிய பொதியை மாத்திரமே உறவினர்கள் கொண்டுவர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டது.

சுகாதார வழிமுறைகளுக்கு அமைய உறவினர்கள் கைதிகளை பார்வையிடுவதற்கான அனுமதி அனைத்து சிறைச்சாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.





# தமிழ்த் தேசிய அரசியலை புதுப்பிக்குமா குட்டித் தேர்தல்?



புருஜோத்தமன் தங்கமயில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு நிராகரிப்பு தொடர்பிலான நீதிமன்ற வழக்குகள் கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டன (அல்லது முடித்து வைக்கப்பட்டுவிட்டன). அதனால், எதிர்வரும் மே மாதம் ஆறாம் திகதி பெரும்பாலும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் நடைபெறப்போகின்றது. ஆளும் தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. வடக்குக் கிழக்கு நோக்கி ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என்று தொடங்கி அனைத்து முக்கியஸ்தர்களும் பிரசாரக் கூட்டங்களில் பங்கெடுக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் காலத்தில் முன்னெடுத்த பிரச்சார வியூகங்களுடன் தேசிய மக்கள் சக்தி, இந்தக் குட்டித் தேர்தலையும் கண்ணும் கருத்துமாக எதிர்கொள்கின்றது. பொதுத் தேர்தலில் கிடைத்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வெற்றிக்கான வாக்குச் சதவீதத்தினை, எந்தவொரு காரணத்தினாலும் இழந்துவிடக் கூடாது என்பது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி, குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி கவனமாக இருக்கின்றது. இரண்டு முக்கிய தேர்தல்களிலும் வெற்றிபெற்று சிறிய காலத்துக்குள்ளேயே, கிராமங்களை நேரடியாக இணைக்கும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலான “குட்டித் தேர்தலில்“ பின்னடைவைச் சந்திப்பது என்பது, புதிய அரசாங்கத்தின் மீதான அதிருப்திகளை வெளிப்படையாக காட்டிவிடும். அதனை உள்வாங்கிக் கொண்டு ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் சென்று வாக்குகளை கவரும் திட்டங்களோடு செயற்படுகின்றது. ஆனால், மறுபுறத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவற்றின் நிலை என்பது பெரும்பாலும் அந்தோ பரிதாபம்.

வடக்குக் கிழக்கில் பிரதான கட்சி என்கிற அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மாத்திரமே,வேட்பாளர்கள் தெரிவு தொடங்கி வேட்பு மனுத் தாக்கல் வரை பெரிய சிரமங்களின்றி இயங்கியது. அந்தக் கட்சியின் மன்னார் மாந்தை மேற்கு மன்றத்தின் வேட்பு மனு மாத்திரம் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், அதுவும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. தமிழரசுக் கட்சி தன்னுடைய வேட்பாளர் அறிமுகக் கூட்டங்களை வடக்குக் கிழக்கு பூராவும் நடத்தவும் தொடங்கி விட்டது. தேசிய மக்கள் சக்தியின் அரச ஆளணி அதிகார பின்னணி இல்லாவிட்டாலும், கட்சிக் கட்டமைப்பினை ஓரளவுக்கு சரியாக கொண்டிருப்பதனால், தமிழரசுக் கட்சி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. கருத்து மோதல்கள், குழுநிலை வாதங்கள் அந்தக் கட்சிக்குள் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன. அதனால், கடந்த பொதுத் தேர்தலில் வடக்கில் தமிழரசுக் கட்சி பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அந்த அனுபவப் பாடத்தினை உள்வாங்கிக் கொண்டு இயங்குவது தொடர்பில் கட்சியின் மத்திய குழு விட்டுக் கொடுப்புக்களைச் செய்து, அனைவரையும் இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கியிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலத்தில் கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட்ட பலரையும் மன்னிப்புக் கடிதங்களை பெற்றுக் கொண்டு தேர்தல்களில் போட்டியிட அனுமதித்துள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இந்தத் தேர்தல் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு வாக்கும் தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கும் வல்லமை கொண்டுள்ளதால், ஒருவர் பத்து வாக்குகளை திரட்டும் வல்லமை பெற்றிருக்கிறார் என்றால் அவரையும் உள்வாங்கி பயணிக்க வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. அந்தத் தெளிவு, தமிழரசுக் கட்சிக்கு பல தேர்தல் பின்னடைவுகளுக்குப் பின்னராவது ஏற்பட்டிருக்கின்றது என்பதை ஓரளவுக்கு மெச்சலாம். ஏனெனில், இந்தத் தேர்தலில் ஒரே குடும்பத்தில் இருந்தே இரு நபர்கள் வேறு வேறு

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசிய அரசியலை புதுப்பிக்குமா குட்டித் தேர்தல்?

கட்சிகளில் போட்டியிடும் காட்சிகளை தமிழர் தாயகம் பதிவு செய்கின்றது. யாழ்ப்பாணத்தில் தாய் தமிழ்த் தேசியக் கட்சியிலும், மகன் தேசிய மக்கள் சக்தியிலும் போட்டியிடும் பிரச்சார சுவரொட்டிகள் சமூக ஊடகங்களில் பிரபலமாக உலாவின. இது கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் நடைபெற்றதுதான். ஆனால், இம்முறை இந்தச் சம்பவங்கள், அதாவது ஒரே குடுபத்தின் நபர்கள் வெவ்வேறு கட்சிகளில் போட்டியிடுவது என்பது ஒப்பீட்டளவில் அதிகரித்திருக்கின்றது. அதனை ஜனநாயகத்தின் நல்வடிவம் என்று கொண்டாலும், உள்ளூராட்சி தேர்தலுக்கான சட்ட திட்டங்கள், சிறிய கட்சிகளை எவ்வாறு வேட்பாளர் தேடுதலுக்காக அலைக்கழிக்கின்றன என்றும் புரிந்து கொள்ள முடியும்.

இழந்திருக்கின்றது. அந்தப் புரிதல் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டதினால்தான், "நாடு யாருடனும் இருக்கட்டும், கிராமம் எங்களுடன் இருக்கட்டும்" என்ற பிரசாரக் கோசத்தோடு தேர்தலைச் சந்திக்கின்றது. அத்தோடு, எப்படி ஆட்சி அமைப்பது, எந்தெந்த சபைகளில் எந்தக் கட்சிகளின், குழுக்களின் ஆதரவினைக் கோருவது என்பது தொடர்பில் பேச்சுக்களையும் அந்தக் கட்சி தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சி இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் அந்தக் கட்சி, தேசிய மக்கள் சக்தியிடம் சபைகளை இழந்துவிடாமல் தடுப்பதற்காக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் முஸ்லிம் கட்சிகள் தொடங்கி இணைந்து



தமிழரசுக் கட்சி இந்தத் தேர்தலில் வடக்குக் கிழக்கில், குறிப்பாக தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவுள்ள சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பிலான கவனத்துடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கட்சியொன்றின் நிலை நீடிப்பென்பது தலைவர்களின் வெற்றிகளில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. மாறாக கடைக்கோடி தொண்டனின் வெற்றியிலும் தங்கியிருக்கின்றது. அதுதான் தொடர் வெற்றிகளுக்கு அடிப்படை. அதுதான் கட்சியையும், அந்தக் கட்சியின் கொள்கை கோட்பாடுகளை காப்பாற்றுவதற்கு உதவும். இல்லையென்றால், கட்சிகளும், அதன் கொள்கைகளும் மெல்ல மெல்லக் கரைந்து காணாமற்போய்விடும். தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் அந்தச் சிக்கலுக்குள்தான் கடந்த சில ஆண்டுகளாக சிக்கிக் கொண்டிருக்கின்றன. கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கில் கணிசமான வாக்கிழப்பினைச் சந்தித்தாலும், அதன் அடிப்படை ஆதரவு நிலையில் பெரிய பின்னடைவுகளைச் சந்திக்கவில்லை என்று கொள்ளலாம். ஏனெனில், அந்தக் கட்சியின் தேர்தல் பின்னடைவு என்பது வடக்கில் மாத்திரம் மிதக்கும் வாக்குகளினால் நிகழ்ந்தது. யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியிடமும், சுயேச்சை ஊசியிடமும் அந்தக் கட்சி சுமார் இருபதாயிரம் மிதக்கும் வாக்குகளை

செயற்படுவதற்கான தயார் நிலையில் இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி, யாருடனும் கூட்டணி ஆட்சி அமைக்காது என்கிற நிலையை, தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தமிழரசுக் கட்சியின் நம்பிக்கை. இது, அடுத்த மாகாணச் சபைத் தேர்தல்களில் வடக்கு – கிழக்கில் ஆட்சி அமைப்பது தொடர்பிலான ஓட்டத்துக்கு வலுச் சேர்க்கும் என்று அந்தக் கட்சி நம்புகின்றது.

மறுவழமாக பார்த்தால், வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களை பெற்றாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை வெற்றிகளை தனித்து அவர்களினால் பெற முடியாது. அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அதனால், ஒவ்வொரு சபையிலும் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டிய சூழலே ஏற்படும். ஏனெனில், தேசிய மக்கள் சக்தி எதிர் தமிழரசுக் கட்சி என்று ஆட்சி அமைப்பதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்றால், தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்க முடியாது. அல்லது, அதனை ஆட்சி அமைக்க வைப்பதற்கான எந்த நிலைப்பாடுகளிலும் இயங்க முடியாது. அதனால், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த வேறு எந்தத் தெரிவுகளும்

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசிய அரசியலை புதுப்பிக்குமா குட்டித் தேர்தல்?

தொடர்ச்சி▲

இல்லை. கடந்த காலங்களில் துரோகிகள், அரசியல் எதிரிகள் என்று தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு புதிதாக வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி என்கிற எதிரியை வீழ்த்துவதற்கு தங்களுக்குள் சில விட்டுக்கொடுப்புக்களுடன் இணைவதைத் தவிர வேறு வழியே இல்லை. அதனால், வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சி பெரும்பாலான சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளினால் வேட்பாளர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதே பெரும் சிரமமாக இருந்தது. அதனால்தான், வேட்புமனுக்கள் சில நிராகரிக்கப்படுவதற்கும் காரணமானது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான புதிய கூட்டணியின் நல்லூர் நகரசபை மற்றும் பருத்தித்துறை பிரதேச சபைக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. அதுபோல, மான் கூட்டணியின் யாழ். நகர சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டு விட்டது. அவற்றை நீதிமன்றங்களுக்கு எடுத்துச் சென்றும், சரி செய்ய முடியவில்லை. இதில், சங்குக் கூட்டணி தப்பிப் பிழைத்துவிட்டது. ஆனால், அதன் வெற்றி வாய்ப்பு என்பது ஒரு சில வட்டாரங்களில் சிலரை மாத்திரம் நேரடியாக வெற்றிபெற வைக்க முடியும் என்கிற அளவிலேயே இருக்கின்றது. ஆனால், உதிரி வாக்குகளினால் கிடைக்கும் விகிதாசார உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, எதிர்கால கூட்டணிக் கணக்குகளை போடுவது தொடர்பில் சங்குக் கூட்டணி கவனத்தோடு இருக்கின்றது. ஏனெனில், அந்தக் கூட்டணியின் தலைவர்கள் முன்னால் இப்போது இரு தெரிவுகள் உண்டு. கடந்த காலங்களில் தனியாவர்த்தனம் செய்து, தாங்கள்தான் கொள்கை வாதிகள் மற்றவர்கள் எல்லோரும் துரோகிகள் என்ற பேசிக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வெற்றி தோல்வி கணக்குகளைக் கருத்தில் கொண்டு இம்முறை தேர்தல் கூட்டணிக்கு வந்துவிட்டது. தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈபிஆர்எல்எவ் உள்ளிட்ட கட்சிகளில் இருந்து கடந்த காலங்களில் பிரிந்து சென்று சிறு குழுக்களை அமைத்துக் கொண்டு செயற்பட்டவர்களை எல்லாமும் தனிக் கட்சிகளாக கருதி இணைத்துக் கொண்டு, தேர்தல் கூட்டணியை, முன்னணி அமைத்துக் கொண்டிருக்கின்றது. அதனால், தமிழரசுக் கட்சியிடம் மாத்திரம் கூட்டணிக்காக தொங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லாமல், சங்குக் கூட்டணிக்கு சைக்கிள் கூட்டணியும் ஒரு மாற்றுத் தெரிவாக இப்போது உருவாகிவிட்டது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில், சிலவேளை தமிழரசிடம் ஆசன பங்கீட்டு பேரம் படியவில்லை என்றால், சங்குக் கூட்டணி சைக்கிள் ஓடும் சூழல் ஏற்படும். அந்த வகையில், தனியாவர்த்தன முடிவில் இருந்து சைக்கிள் இறங்கி வந்தமை, தமிழரசுக்கு எதிரான அணியை யாழ்ப்பாணத்துக்குள் ஓரளவுக்கு பலப்படுத்தும் சூழலும் மலர்ந்திருக்கின்றது. ஆனால், தேர்தலுக்கு பிந்தைய ஆட்சி அமைப்புப் பற்றிய நடவடிக்கைகள் என்பது, தமிழரசு மற்றும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் இணைவு என்கிற அளவிலேயே நிகழப்போகின்றது.

பொது எதிரியை மறந்து தங்களுக்கு இடையில் மோதிப் பிளவுண்டு மக்களை வெறுப்படைய வைத்து, மடைமாற்றிவிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கடந்த பொதுத் தேர்தல் தோல்விகள் சிறந்த அனுபவத்தை வழங்கியது. அந்த அனுபவம், அரசியல் என்கிற தொடரோட்டத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாடுகளின் போக்கில், விட்டுக்கொடுப்புக்களுடனான ஒருங்கிணைவு என்பதை தவிர்க்க முடியாதது ஆக்கியுள்ளது. அந்த நிலைப்பாட்டிலிருந்து தவறினால், கட்சி காணாமற்போய் விடும் என்கிற யதார்த்தம் பலருக்கும் உறைத்திருக்கின்றது. அந்தப் புரிதலை, இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னரான நாள்கள் பதிவு செய்யும் என்று நம்பலாம். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் எரிச்சலூட்டும் தனிப்பட்ட குரோத அரசியல் நடவடிக்கைகளில் சலிப்படைந்த பல தமிழ்த் தேசியவாதிகளும், இப்போது தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பாற்றுவதற்காக களத்துக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் கடந்த காலங்களில் பதவிகள் – பகட்டுக்களுக்காக இயங்கியவர்கள் அல்லர். அவர்கள் இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற ஒன்றை நோக்கிய ஓட்டத்தில் குறியாக இருக்கிறார்கள். அது சாத்தியப்பட்டால் தமிழ்த் தேசிய அரசியலுக்கு நல்லது. அதனை, வரும் காலம் சாத்தியப்படுத்தும் என்று நம்பலாம். தமிழ்த் தேசிய அரசியலின் மீள் எழுச்சிகள் என்பது நம்பிக்கைகளினால் மாத்திரமே நிகழ்ந்திருக்கின்றது.





# பிரதமர் மோடியின் வருகையும் தமிழ் கட்சிகளின் பரிதாபமும்!



வி.எஸ்.சிவகரன்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்ற காலத்தில் நான்காவது தடவையாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

பிராந்திய நலன்களை மேம்படுத்தும் நோக்கிலும் இராஜதந்திர உறவை வலுப்படுத்திக் கொள்ளும் அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலும் அரசு முறைப் பயணமாக இலங்கை வந்தவர் ஏழு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

அவ் உடன்படிக்கைகள் தொடர்பான முழுமையான விவரங்கள் இதுவரை வெளிவரவில்லை.

இந்திய எதிர்ப்பு வாதத்தை அரசியல் சித்தாந்தமாகக் கொண்டிருந்த ஜே.வி.பி. அவரை வரவேற்று, விருது வழங்கி, மதிப்பளித்திருக்கிறது. அதிகாரத்துக்கு வந்து விட்டால் கடந்த கால கொள்கை என்ன, கோட்பாடு என்ன, நேற்றைய நாளை நீசமற மறந்துவிடு என்கின்ற தத்துவத்தில் தான் அதிகார கட்டமைப்பு உறவுகள் காணப்படுகின்றன. தத்தமது இருப்பியல் நலனை அடிப்படையாகக் கொண்டு, உறவு மேம்படுத்துகின்ற நோக்கில், கோட்பாட்டுத் தத்துவங்களை எல்லாம் காலாவதி ஆக்கிவிட்டு, பெற்ற அதிகாரத்தை வல்லாளர்களோடு சேர்ந்து எப்படி இறுகப் பற்றி கொண்டு தொடர்ந்து அதிகாரத்தைச் சுவைக்கலாம் என்கின்ற வியூகத்தை வகுப்பதே முதலாளித்துவ கோட்பாட்டின் மூலதனமாகும்.

பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகள் தாமென அதிகார வர்க்கத்துக்கு எதிராக ஏகாதிபத்திய அடக்குமுறையை தகர்த்தெறிவோம் என ஐந்து தசாப்தமாக வெகுண்டெழுந்த ஜே.வி.பி. செம்கம்பள வரவேற்பு அளிக்கின்ற அளவில் தமது நிலைப்பாட்டை மாற்றி இருக்கிறது.

இந்தியாவோடு இணங்கிப் போகாவிட்டால் தமது அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்திருக்க முடியாது என்பதை அதிகாரம் வந்த பின்னர் உணர்ந்து இருக்கிறது ஜே.வி.பி. ஆனாலும் இந்தியத் தரப்போ பாதுகாப்பு விடயத்திலும் தமது நலனியல் சார்ந்த அணுகு முறையிலும் மிகவும் தந்திரோபாயமான ரீதியில் காய் நகர்த்தி இருக்கிறார்கள்.

வழமையான முறைமைகளுக்கு அப்பால் இலங்கையின் ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னும் ஒரு நாட்டின் தலைநகருக்கு அல்லாமல் அங்கும் பிராந்தியத்திற்கு சென்றடைந்திருக்கிறார் இந்திய பிரதமர். அதில் தலைமன்னார் – இராமேஸ்வரம் போக்குவரவு பாதை அமைப்பது தொடர்பான இராமர் பால திட்டுகளை உலங்கு வானூர்தியில் இருந்து பார்வையிட்டுச்சென்றுள்ளார்.

போக்குவரவிற்குப் பாதை அமைப்பதற்கு 2016 ஆம் ஆண்டுடில் இருந்து நிதின் கட்காரியின்அமைச்சுபணத்தை ஒதுக்கீடு செய்து விட்டு காத்திருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாகியும் எந்தப் பணியும் தொடங்கவில்லை. எதிர்காலத்திலும் தொடங்கக்கூடிய சூழல் இருக்குமா என்பது கேள்விக்குறியே. பீஜிங்கிக்கும் கொழும்பிற்கும் உண்டான உறவால் தலைமன்னார் – இராமேஸ்வரம் தரைப்பாதை அமைப்பதோ அல்லது குறைந்த பட்ச போக்குவரவுக்கு ஓர் இணைப்பு ஏற்படுத்துவதோ கூட இலகுவாக சாத்தியப்படக்கூடியது அல்ல. இந்தியாவோடு தரை மார்க்கமாக இணைவது என்பதை கொழும்பு இதயசுத்தியாக விரும்புவதாகத் தெரியவில்லை. அதற்குப் பின்னுக்கு பீஜிங் இருக்கலாம் எனும் வாதமும் இல்லாமல் இல்லை .ஏனெனில் கொழும்பை கையாள்வது டெல்லியா, பீஜிங்கா என்கின்ற ராஜதந்திர பனிப் போர் மிக நீண்ட காலமாக நீள்கிறது. மேற்குலக சார்புடைய ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தில் இருந்த போதும் கூட இந்தியாவையும் சீனாவையும் சம பங்கிலேயே அணுகி வந்தார். ஆகவே இவ்விதமான இருநாட்டு சிக்கல்கள் காணப்படுவதனால்இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான தரை வழி இணைப்பு என்பது இப்போதைக்கு சாத்தியப் படக்கூடிய ஒன்றாக இல்லை.

அவ்வாறான இணைப்பு ஏற்படுகின்ற போதும் அது தமிழ் மக்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். சமூக, வாழ்வியல், பண்பாட்டியல், வணிகவியல், உரிமை சார் அரசியல், தமிழ் தேசிய அரசியல் போன்றவை கேள்விக்கு உட்படக்கூடிய நிலை எழலாம். யாழில் துணை தூதரகத்தை வைத்துக் கொண்டே கட்டப்பஞ்சாயத்து நடத்தும் இந்தியா, தரைப் பாதையும் அமைத்து விட்டால் இலங்கையை ஒரு மாநிலமாக்க வேண்டும் என்கின்ற தனது நீண்ட நாள் சிந்தனையை செயல்படுத்தி விடக்கூடிய ஆபத்தை கொழும்பு உணராமல் இல்லை.

மோடியின் வருகை தமிழ் மக்களுக்கு எந்த

தொடர்ச்சி ▼

# பிரதமர் மோடியின் வருகையும் தமிழ் கட்சிகளின் பரிதாபமும்!

தொடர்ச்சி ▲

விதமான சாதகமான நிலைப்பாட்டையும் ஏற்படுத்தக்கூடிய சூழல் காணப்படவில்லை.

அரசற்ற தரப்புகள் தொடர்பான அணுகுமுறை என்பது வெறும் சம்பிரதாயபூர்வமானதாகவே காணப்படுகிறது. தமிழர் தரப்பு முழுமையாக ஏற்றுக் கொள்ளாத 13 ஆவது திருத்தத்தையே முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைக் கூட கடுமையாக வலியுறுத்தாத இந்தியாவால் இனப்பிரச்சனைக்கு தீர்வு சாத்தியமில்லை. 'இந்து தமிழீழம்' கேட்டால் இந்தியா ஆதரிக்கும் என படித்தவர்கள் என சொல்லப்படும் அதிமேதாவிகள் சிந்தனையும் சிதறிப்போய் இருக்கிறது. பல தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் பத்தி எழுத்தாளர்கள் எனச் சொல்லப்படுபவர்களும் சில இந்துத்துவவாதிகளும் இந்தியாவின் ஏகத்துவ அனுதாபிகளாக இருப்பதே தங்களுக்கு பெரும் பாக்கியம் எனபுளகாங்கிதமடைந்து கொள்கிறார்கள்.

தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடலில் கூட தமிழ் தேசிய இன பிரச்சினை தொடர்பில் வலிமையாக வலியுறுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதற்குக் காரணமும் உண்டு இந்திய தூதரகம் சந்திப்பை இரகசியம் பாதுகாக்க கூறியதுடன் யார்,யார் பேசுவார்கள், எத்தனை நிமிடம் பேசுவது, எவ்விதமாக பேசுவது, ஏனையவர்கள் பேசக்கூடாது, நீங்கள் சொல்வதை பிரதமர் கேட்பார், பிரதமரோடு கடுமையாக நடந்து கொள்ளக் கூடாது எனக் கடுமையான நிபந்தனைகளை விதித்தது, சிலரை அறவே வாய் திறக்க கூடாது எனத் தூதரகத்துக்கு அழைத்தும் வலியுறுத்தியது. இவ்விதமான ஒரு அடிமை சந்திப்பையே இந்தத் தமிழ் தலைவர்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

வெளியில் வந்து ஊடகங்களில் கர்ஜித்த அளவிற்கு இவர்களின் நிலைமை பரிதாபத்துக்குரியது. அதிலும் இந்திய எதிர்ப்புக்குக் கடந்த காலத்தில் ஜே.வி.பிக்கு இணையாக இருந்த குடும்பக் கட்சி வாரிசான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 'இந்தியாவின் அடிமைகள்' என்றும் '13 ஆம் திருத்தத்தை ஏற்பவர்களுடன் கூட்டு இல்லை' என்றும் முழுக்க முழுக்க இந்திய எதிர்ப்பு வாதத்தில் தங்களை கட்டமைத்து வைத்திருந்த ஒரு கட்சி, 13 பற்றி உரையாடுவதற்கு எங்களை டெல்லிக்கு அழையுங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு கேவலமான நிலைமைக்கு வந்துள்ளனர். அவர்கள் அமைத்து இருக்கின்ற இன்றைய கூட்டாளிகள் கூட அவர்களுடைய மொழியில் இந்தியாவின் அடிமைகளே.

ஓர் அரசியல் கட்சி தன்னுடைய கோட்பாட்டையோ சித்தாந்தத்தையோ பூகோள நலன்களுக்கு ஏற்ற விதத்தில் மாற்றி அமைத்துக் கொள்வது ஒன்றும் தவறான விடயம் அல்ல. ஆனால் மக்கள் முன்னிலையில் இந்த மாற்றத்திற்கு அடிப்படை காரணம் என்ன, ஏன் நாங்கள் மற்றவர்களோடு இணங்கி போகின்றோம், இந்தியாவோடு ஏன் ஐக்கியமாக இருக்கின்றோம் என்கின்ற விடயங்களை மக்கள் மன்றிலே கூறாமல், திருட்டுத்தனமாக உறவைப் பேணுவதை மக்கள் ஒருபோதும் இரசிக்க மாட்டார்கள்.

தங்களுடைய கட்சிக் கொள்கையிலேயே சமரசம் செய்து கொண்டவர்கள், மக்கள் நலன் சார்ந்த கோட்பாட்டில் எப்படி சமரசம் செய்ய மாட்டார்கள் என வெளிப்படையாகவே கேட்கத் தோன்றும். இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன என கூறமுனையாதவர்கள், யாழ் மைய வாதத்தில் சில தனி நபர்களுடன் கூட்டமைத்து இருக்கிறார்கள். எல்லோருக்கும் துரோகி பட்டம் வழங்குபவர்கள், அவர்களால் துரோகியென விடுக்கப்பட்டவர்களையே இன்றைக்கு சகபாடிகளாக – கூடத் துணையாக – நிற்கிறார்கள். 'அரசியலில் இது எல்லாம் சகஜமப்பா' என்கின்ற அளவிற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குழுவினரும் வந்து விட்டனர் என்பதே ஆச்சரியமற்ற உண்மை.

குறைந்தபட்சம் சந்தித்த தமிழ் கட்சிகள் தங்களுக்குள் ஏலவே பேசி ஒரு திட்டவட்டமான முடிவோடு போய் உரையாடி இருக்க வேண்டும். உரையாடும் விடயத்தில் முக்கிய விடயங்களை எழுத்தில் சமர்ப்பித்து இருக்க வேண்டும். இங்குள்ள ஆட்சியாளர்களினுடைய அடக்குமுறைகள் சம்பந்தமாக புள்ளி விவரங்களோடு வழங்கி இருக்க வேண்டும். எதுவுமே இல்லாமல் வழமை போன்று வாய்ச் சொல்லில் வீரரடி என உரைத்து விட்டு வந்திருக்கிறார்கள்.

இதைத்தான் முன்னர் மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போதும் சம்பந்தன் தலைமையில் சந்தித்தபோது இனப்பிரச்சினை தீர்வு காண உங்களுடைய திட்டம் என என்ன என கேட்கப்பட்டபோது இவர்கள் எதுவுமே எழுத்தில் கொண்டு போகாதால் ஆளுக்கு ஆள்பார்த்து விட்டு தலைகோதினார்கள் என அன்று ஊடகங்கள் விளித்திருந்தன.

ஒரு நாட்டு எல்லைக்குள் எல்லை தாண்டி சட்டவிரோதமாக வருவது குற்றம் என இந்தியா ஏற்றுக்கொள்ளாமல் மீனவர் விடயம் பற்றி பேசுவது பயனற்றது.

இந்தியா ஒருபோதும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் உளப்பூர்வமாகச் செயலாற்றக் கூடியது அல்ல. தமிழ் தேசியத்தைச் சிதைத்ததிலும், விடுதலைப் புலிகளை அழித்ததிலும், முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையிலும் கூட்டுப் பங்குள்ள ஒரு நாட்டால் எப்படி தன்னால் அழிக்கப்பட்ட ஓர் இனத்தில் எஞ்சியவர்களுக்கு உதவி செய்வார்கள் என நம்புவதும் எதிர்பார்ப்பதும் மிகப் பெரிய தவறும் அவமானமுமே....!

மோடியின் வருகை பௌத்தமயமாக்கல் நிலைப்பாட்டிலோ, நிலப்பரம்பல் குடிப்பரம்பல் மாற்றும் செயல்பாட்டிலோ எந்தவித மாறுதலையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில் கொழும்போடு முழுமையாக இந்தியாவால் முரண்பட முடியாது. அவ்வாறு முரண்பட வேண்டிய தேவையும் கிடையாது. வடக்கு, கிழக்குத் தமிழர்கள் தங்கள் தாயகத்தை சுயாதீனமாகத் தாங்களே ஆளுகின்ற அதிகார வரம்புக்கு இந்தியாவின் நிலைப்பாடு எதிரானதாகவே காணப்படுகிறது.

கூட்டாட்சி தத்துவத்தை நடைமுறைப்படுத்தும் இந்தியாவால், இலங்கையிலே அவ்விதமான ஒரு நிலைப்பாட்டை தோற்றுவிப்பதற்கு முடியாமல் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட செயல்பாட்டையே இன்றைய ஆட்சியாளர்களும் தொடர்கின்றனர்.

மோடி வந்தார், அரசோடு இணைந்து நின்றார், தன் எதிர்கால நலனோடு சென்றார். இதனால் தமிழர்களுக்கு எந்த வகையிலும் பயனுறுதியான நிலைப்பாடு ஏற்படப்போவதில்லை.

இந்தியாவை நம்புவர்களாலும் எதுவும் செய்ய முடியவில்லை. இந்தியாவை எதிர்ப்பவர்களாலும் இந்தியாவுக்கு எதிராக எதையும் கட்டமைக்க முடியவில்லை. இரண்டு விடயங்களுமே இராஜதந்திர நிலைப்பாட்டில் தோல்வி அடைந்தவையாகவே காணப்படுகின்றன.



# பலாலி வீதி திறப்பு வெறும் பம்மாத்தே!

- ந.லோகதயாளன் -

யாழ்ப்பாணம் பலாலி வீதி 35 ஆண்டுகளின் பின் பகலில் மட்டும் பயணிக்க அனுமதிக்கப்பட்டமை அப் பகுதி நில உரித்தாளர்களின் நெஞ்சில் பல ஏக்கங்களையும் திறந்து விட்டதாகவே அமைகின்றது.

நில உரிமையாளர் ஒருவருடன் அப் பகுதிக்கு நேரில் பயணித்து நிலைமைகளை அவதானித்தோம்.

2025-04-10 அன்று பகலில் மட்டும் பயணிக்க கடும் எச்சரிக்கை நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டது.

உட் பிரவேசிக்கும், வெளிச் செல்லும் இரு பக்கத்திலும் அந்த எச்சரிக்கை அடங்கிய அறிவித்தல் விளம்பரம் பெரிய அளவில் 3 மொழிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கைக்கும் அப்பால் எப்படியேனும் தமது பூர்வீக இடத்தை உயிரோடு இருக்கும்போது ஒரு தடவையேனும் பார்த்து விட வேண்டும் என்ற ஏக்கத்தில் பலர் முண்டியடித்து உள்ளே சென்றால் வீதியின் இரு திசைகளிலும் இராணுவத் தலைமையகம், 4 ஆவது படையணி, 3 ஆவது படையணி, சமிக்ஞைப் படையணித் தலைமையகங்கள் என அதிக கட்டடங்களை மக்களின் காணிகளில் அடாத்தாக அமைத்து படையினர் அங்கு ஓர் உல்லாச வாழ்வை வாழ்வது தெரிகின்றது.

இதனைக் கண்டுகொண்டு தாண்டிச் சென்றால் இராணுவத்தினருக்கான இரு உணவகங்கள், பணப் பரிவத்தனை நிலையம் என்பவற்றோடு இராணுவத் தபாலகம் எனபனவும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருகே படையினரின் பயன்பாட்டிற்கானஸ்போட்ஸ்கொம்பிளக்ஸ்ஒன்றும்அமைக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பில் ஒப்புக்கு ஓர் நியாயப்படுத்தலை மேற்கொண்டாலும் மக்களின் நூற்றுக் கணக்காண ஏக்கர் நிலத்தில் தோட்டச் செய்கை, அதில் 10 வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் நாட்டப்பட்ட தென்னங் கன்றுகள் என வருமானம் ஈட்டலும் இடம்பெறுகின்றது.

இத்தனையும் கண்ணால் மட்டும் பார்த்தவாறு (ஒளிப்படம் எடுக்கத் தடை) சென்று கொண்டிருந்த சமயம் கைத் தொலைபேசியின் அழைப்பு மணி அடித்தமையால் தொலைபேசி அழைப்பை ஏற்றுப் பதிலளித்து விட்டுச் செல்வோம் என எண்ணி மோட்டார் சைக்கிளின் வேகத்தை குறைத்து வீதியில் கால் ஊன்றிய உடன் எங்கிருந்தோ ஓடி வந்த ஓர் இராணுவச் சிப்பாய் இங்கே நிறுத்தக் கூடாது போய்க் கொண்டிருக்கலாம் என்றார்.

கைத்தொலைபேசி அழைப்பை எடுத்து விட்டுச் செல்கின்றேன் எனப் பதிலளித்தபோது அது எல்லாம் இங்கு நின்று பேச முடியாது, தடைக்கு அப்பால் சென்று பேசுங்கள் என்றார்.

சரி, வெய்யில் அதிகரித்தமையால் அங்கே காணப்படும் உணவகத்தின் உள்ளே சிவில் உடையில் இருவர் அமர்ந்திருக்கின்றனரே, அதனால் ஓர் சோடா வேண்டிக் குடிப்போம் என எண்ணி உணவகம் நோக்கி மோட்டார் சைக்கிளைத் திருப்பினால் அந்த உணவகங்கள் படையினருக்கு மட்டுமே அன்றி பொது மக்களிற்கானது அல்ல, அதனால் செல்லுங்கள் என்று உத்தரவிடப்பட்டது.

இவ்வாறு நிலத்திற்கான அறுதி உறுதி கொண்ட உரிமையாளர்களின் காணிகளை சட்ட விரோதமாக ஆக்கிரமித்து நிற்கும் படையினர் அப் பகுதி 'இராணுவக் குடியிருப்பு' என்கின்ற சொல்லாடலைப் பயன்படுத்துவதை நிலத்தின் உரிமையாளர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றனர். இதில் மிக கொடுமை என்னவெனில் திறக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த வீதியால் வாகனங்கள் மட்டுமே பயணிக்க முடியும். எவரும் கால் நடையாகப் பயணிக்க முடியாது.

இதனைவிட மிக வேடிக்கையான அறிவுறுத்தல் என்னவெனில் இந்த வீதியில் பாதசாரிகள் செல்ல முடியாது, வாகனங்கள் மட்டுமே பயணிக்க முடியும் என்றதோடு பயணிக்கும் அனைவரும் சான்று ஆவணம் வைத்திருக்க வேண்டுமாம். சாரதிகள் என்றால் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது வாகனத் செலுத்துகின்றனரா என்ற ஐயம் எழ வைப்பதோடு சாதாரண பயணிகளிற்கு மீண்டும் அடையாள அட்டை யுகம் உருவாக்கப்படுகின்றதா என்ற ஐய வினாவும் எழுந்துள்ளது.

இவை அனைத்திற்கும் அப்பால் ஊடகவியலாளராகிய எனக்கு புலப்படாத ஓர் விடயம் சில வேளை யாராவது சட்டத்தரணிகளிற்கு புரிகின்றதோ தெரியவில்லை. அதாவது மேற்படி அறிவுறுத்தல்களை மீறுதல் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய குற்றமாகும் என்ற மொட்டை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வாறானால் அது எந்தச் சட்டத்தின், எந்த சரத்தின் கீழ் தண்டிக்கப்படும் குற்றம் என்பது இந்த அறிவித்தலை நாட்டியவர்களிடம் கேட்கப்பட வேண்டிய முக்கியமான கேள்வியாக உள்ளது.

இந்த அறிவித்தலே சட்ட விரோதமானது என மனித உரிமை ஆணைக்குழு இதனை கையில் எடுத்துள்ளது. இந்த அரசு மனித உரிமை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை ஏற்று நடக்கும் என எவரும் எதிர்பார்க்கவும் முடியாது.



# கோறளைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் தமிழரசு வேட்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம்

இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக கூட்டம் நேற்றைய தினம் காலை முறக்கொட்டான்சேனையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 உள்ளூராட்சி மன்றங்களில் 9 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும் நோக்கில் தமிழரசுக் கட்சியின் பரப்புரைக் கூட்டங்கள் இம்முறை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மட்டக்களப்பு வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக கூட்டம் நேற்றைய தினம் காலை முறக்கொட்டான்சேனையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை தமிழரசுக் மிகப்பெரிய அளவில் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் செங்கலடிமுறக்கொட்டான்சேனையில் உள்ள மக்கள் இம்முறை தமிழரசுக் கட்சிக்கு மிகப்பெரிய வரவேற்பளித்ததோடு மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியிருந்தனர்.









# தெற்குத் தேர்தல்களுக்கு தமிழ்க் கட்சி ஏதும் வராதபோது நீங்கள் ஏன் இங்கு வருகிறீர்கள்?

## ஜே.வி.பி. உட்பட்ட சிங்களக் கட்சிகளிடம் சி.வி.கே.சிவஞானம் கேள்வி



நாடாளுமன்றத் தேர்தலாக இருக்கட்டும். மாகாண சபை தேர்தலாக இருக்கட்டும். உள்ளூராட்சி சபை தேர்தலாக இருக்கட்டும். தமிழ் அரசுக் கட்சி உட்பட எந்தத் தமிழ்க் கட்சியும் தெற்கிலே போய் எந்த இடத்திலாவது போய் எந்த தொகுதியிலாவது போட்டியிடுகிறோமா? நீங்கள் மட்டும் இங்கே எல்லா இடமும் வந்து நாடாளுமன்ற தேர்தல், மாகாண சபை தேர்தல், உள்ளூராட்சி சபை தேர்தல் என போட்டியிடுவது எந்த வகையில் நியாயம்?

– இப்படி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

அண்மைக்காலமாக அரசாங்கத்தினுடைய அமைச்சர்கள் வடக்கு, கிழக்கிற்கு– குறிப்பாக யாழ்ப்பாணம் நோக்கி – படையெடுத்து வருகின்றார்கள். ஒன்றன்பின் ஒன்றாக இங்கு வந்து அரசியல் செய்கிறார்கள். ஆலயங்களுக்கு முன்னால் மேடை அமைத்து கூட்டங்களையும் நடத்துகிறார்கள். இது பொருத்தமானது அல்ல. தேர்தல் விதி முறைகளுக்கு மாறானது.

ஜே.வி.பியை பொறுத்தவரையில் கடந்த பத்து வருடங்களாக எனக்கு தெரிந்த வகையில் இங்கு வந்து போனவர்கள் தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்கவும் தற்போதைய சபை முதல்வர் பிமல் ரத்னாயக்கவுன் மட்டுமே.

ஆனால் இப்போது அதிகார தோரணையில் – ஏகாதிபத்திய சிந்தனையில் – கடந்த அரசாங்கங்கள் மற்றும் கட்சிகளின் மனோபாவத்தில் – இங்கே வந்து தமிழ் மக்களிடம் பழகி விட்டுப் போகலாம் என்று செயற்படுகின்றனர் எனத் தெரிகிறது.

அவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நடைபெறவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் அவ்வாறே இருக்கிறது.

குறிப்பாக நான் அரசாங்கத்தை பார்த்து கேட்க வேண்டிய முக்கியமான ஒரு கேள்வி உண்டு.

தமிழ் மக்கள் கடந்த 75 வருடங்களுக்கு மேலாக ஒரு தேசிய இன பிரச்சனைக்காகப் போராடி வருகின்றனர். தமிழ் மக்கள் தொடர்பாக ஜே.வி.பினுடைய நிலைப்பாடு என்ன? தமிழ் மக்களை (சிங்கள) தேசியத்துக்குள் கரைப்பதற்கே அவர்கள் முற்படுகிறார்கள்.

இங்குள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் என்பது எங்களுடையது. அதை மறந்து இங்கு போட்டியிடுவது என்பது ஏகாதிபத்திய சிந்தனை என்பதை நீங்கள் உணரவில்லையா?

அதிலும் இங்கிருக்கக்கூடிய அனுபவஸ்தர்கள், தெரிந்தவர்களை மழுங்கடித்து, அதிகாரத்தினுடைய எல்லைகளை உச்சமாக கொண்டு நீங்கள் செய்வது பொருத்தமானவையல்ல என்பதை ஏற்றுக் கொண்டு மக்களிவர்களை மறுதலிக்க வேண்டும்.

மாயைகளில் மக்கள் சிக்காமல் இதை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை தமிழ் அரசு கட்சி தமிழ்த் தேசியத்துடனேயே நிற்கிறோம் என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் – என்றார்.

# சூரிய மின்கலங்களை தற்காலிகமாக செயலிழக்கச் செய்யுமாறு கோரிக்கை

இன்று முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை பகல் வேளையில் வீடுகளின் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலங்களிலிருந்து மிசாரத்தை வீட்டுக்கு வெளியே பிரதான மின் வழிக்கு அனுப்பும் ஒழுங்கைத் தற்காலிகமாக செயலிழக்கச் செய்யுமாறு இலங்கை மின்சார சபை பாவணையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை சூரிய மின்சக்தி கட்டமைப்பை செயலிழக்கச் செய்யுமாறு இலங்கை மின்சார சபை கோரியுள்ளது.

# வவுனியாவில் தேர்தல் அலுவலகம் திறந்து வைத்த பிரதி அமைச்சர்



(கி.வசந்தன்)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் கந்தபுரம் வட்டாரத்திற்கான தேசிய மக்கள் சக்தியின் பிரசார அலுவலகத்தை கூட்டுறவுத்துறைப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க திறந்து வைத்தார்.

வவுனியா, கந்தபுரம் வட்டாரத்திற்குட்பட்ட தோணிக்கல் பகுதியில் நேற்று மாலை இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும பட்சத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், தமிழ் மக்களின் ஆணையுடன் தமிழ்த் தவிசாளர், தமிழ்ப் பிரதி தவிசாளர் நியமிக்கப்பட்டு பிரதேச நிர்வாகத்தை முன்னெடுப்பது தொடர்பிலும், உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது அமைச்சாரால் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், அமைச்சருடன் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# திருநெல்வேலியில் காத்தவராயன் உற்சவம்

(ந.லோகதயாளன்)

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய காத்தவராயன் உற்சவம் நேற்று இரவு இடம்பெற்றது.

வருடந்தோறும் நடைபெறும் இந்தக் காத்தவராயன் உற்சவம் இம் முறையும் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த உற்சவத்தையொட்டி குயிலாட்டம், பொம்மலாட்டங்களுடன் வாண வேடிக்கையும் மிகச் சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# கிராமிய மக்களை தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபடுத்த உரிய முதலீடுகளை கிராமங்களுக்கே கொண்டு வருவோம்

## மன்னாரில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதி தெரிவிப்பு





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் புதிய திட்டங்களை ஆரம்பித்து, கிராமிய மக்களை தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபடுத்த தேவையான முதலீடுகளை கிராமங்களுக்குக் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

மன்னார் நானாட்டான் பகுதியில் நேற்று இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது நாடு ஒரு தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி மக்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்ட அரசாங்கம். இந்த நாட்டில் நிலவிய ஊழல் அரசியலை ஒழிக்க இன, மத வேறுபாடுகளைக் கடந்து மக்கள் ஊழலுக்கு எதிராக வாக்களித்தனர். இதன் விளைவாக, அநுர குமார திஸநாயக்க 2024 இல் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அதற்கு ஒரு மாதத்திற்குப் பின்னர், வரலாற்றை மாற்றும் ஒரு நாடாளுமன்றத்தை நாங்கள் உருவாக்கினோம். இன்று, அந்த நாடாளுமன்றத்தில் நூற்று ஐம்பத்தொன்பது உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கம் உள்ளது. இன்று நாடாளுமன்றத்தில் ஊழலுக்கு எதிரான ஒரு பெரிய குழு உள்ளது. அனைத்து இனங்கள், மதங்கள் மற்றும் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசாங்கம் இன்று அமைக்கப்பட்டுள்ளது. ஒரு தனிக் கட்சி அரசாங்கத்தை அமைத்து அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவது இதுவே முதல் முறை. இந்த வெற்றிகள் அனைத்தும் மக்களால் அடையப்பட்டன, வெற்றியாளர்கள் மக்களே.

மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையைப் பாதுகாத்து அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

நாங்கள் நாட்டைக் பொறுப்பேற்கும் போது பொருளாதாரம் எவ்வளவு பலவீனமாக இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும். உலகிற்கு முன்பாக நாம் வங்குரோத்து நிலையை அடைந்த நாடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டோம். இலங்கையில் பல ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சி இருக்கவில்லை. எதிர்மறையான பொருளாதாரமே இருந்தது. சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்திருந்தது. அரசியல் அதிகாரத்தில் இருந்த ஊழல் காரணமாக முதலீட்டாளர்கள் இந்த நாட்டிற்கு வரத் தயங்கினர். இன்று, நாம் அதையெல்லாம் மாற்றி, வங்குரோத்து நிலை என்ற முத்திரையை உத்தியோகபூர்வமாக அகற்றுவதில் வெற்றி பெற்றுள்ளோம். பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் செலுத்த முடிந்துள்ளது. முதலீட்டாளர்கள் வரத் தொடங்கியுள்ளனர். சர்வதேச அளவில் எம் மீதான நம்பிக்கை அதிகரித்து வருகிறது.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் புதிய திட்டங்களை ஆரம்பித்து, கிராமிய மக்களை தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபடுத்த தேவையான முதலீடுகளை கிராமங்களுக்குக் கொண்டு வர நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தை நாம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினோம். பொருளாதாரம் இன்னும் வலுவாக இல்லாவிட்டாலும், வரவு - செலவுத்திட்டத்தில் இரண்டு முக்கிய விடயங்களை நிறைவேற்ற விரும்பினோம். ஒன்று - பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவது, அடுத்தது - பொருளாதார சிக்கல்களால் கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை அதிகரிப்பது. எனவேதான் நாங்கள் அஸ்வெசும உதவி வழங்கும் அளவை அதிகரித்தமையுடன், காலப் பகுதியையும் நீடித்தோம். அஸ்வெசும இருந்தாலும் இல்லாவிட்டாலும், முன்னூறுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளுக்கு புத்தகங்களை வாங்க வவுச்சர்களை வழங்கினோம். மேலும் சமூகப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்த நாங்கள் தலையிட்டோம்.

முன்னைய அரசாங்கங்கள் மக்கள் மீது சுமையாக இருந்தன. ஆனால் இன்று எம்மிடம் மிகவும் சிறிய அமைச்சரவை உள்ளது. எங்கள் அரசாங்கம் உங்களுக்கு ஒரு சுமையாக இல்லை. செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. வீண்விரயம் குறைக்கப்பட்டுள்ளது. திருட்டுகள் இடம்பெறுவது இல்லை.

மக்களுக்கு சுமையாக இல்லாத அத்தகைய அரசாங்கத்தால்தான் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்தது. இந்த வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்று, அரச ஊழியர்கள் நல்ல சம்பளம் பெறக்கூடிய நிலையை அடைந்துள்ளனர். அரச ஊழியர்கள் சுதந்திரமாக தங்களது பணிகளைச் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அரசியல் நலன்களை அடிப்படையாகக் கொண்டு அல்லாமல், தரவுகளின் அடிப்படையில் மக்களுக்காக முடிவுகளை எடுக்கும் வாய்ப்பை நாங்கள் அரச ஊழியர்களுக்கு வழங்கியுள்ளோம். அத்தகைய ஒரு சுயாதீன அரச சேவையை தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம். மக்கள் நேய அரசாங்கத்தைப் போன்றே, மக்கள் நேய அரசாங்க சேவையும் தேவை. வீண்விரயம் மற்றும் திருட்டு இல்லாத திறமையான, மக்கள் நேய அரச ஊழியர்கள் எமக்குத் தேவை. அதற்குத் தேவையான சூழலை நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் அதிக அளவு நிதி ஒதுக்கியுள்ளோம். அந்தப் பணம் மக்களுக்கு முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமானால், உள்ளூராட்சி மன்றமும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். கிராமத்தில் உள்ள தலைவர்கள் திருடர்களாக இருந்தால், அந்

தொடர்ச்சி ▼

# கிராமிய மக்களை தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபடுத்த உரிய முதலீடுகளை கிராமங்களுக்கே கொண்டு வருவோம்



தொடர்ச்சி▲

தப் பணத்தை ஒதுக்குவதால் எந்தப் பலனும் இருக்காது. இதனால்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறியுள்ளன. – என்று பிரதமர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெகதீஷ்வரன், டாக்டர் செல்லத்தம்பி திலகநாதன் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி வேட்பாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# சுற்றுலாத்துறை அபிவிருத்தி குறித்து யாழில் அமைச்சர் விஜித ஹேரத் நேற்றுக் கலந்தாய்வு

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணத்திற்கு நேற்றையதினம் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது வடமாகாண சுற்றுலாத் துறை சார்ந்த தொழில் முனைவோர்களுடன் விசேட கலந்துரையாடலில் அவர் ஈடுபட்டார்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது குறித்து வட மாகாண தொழில் முனைவோரின் கருத்துக்கள் தொடர்பாக இதன்போது அமைச்சர் விஜித ஹேரத் கேட்டறிந்துகொண்டார்.

கொழும்பு – யாழ்ப்பாணம் இடையிலான ஆகாய மார்க்க பயண சேவையை ஆரம்பித்தல், யாழ்ப்பாணம் – பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக இலங்கைக்கு வரும் பயணிகள் விவரத்தை உரிய திணைக்களூடாக வெளிப்படுத்துதல், வில்பத்து சரணாலயத்துக்கான நுழைவாயிலை மன்னாரிலும் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அமைச்சரிடம் கோரிக்கையாக முன்வைக்கப்பட்ட நிலையில் அந்தக் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவது குறித்த சாதக, பாதகங்கள் இதன்போது அமைச்சரால் தெளிவுபடுத்தப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான பவானந்தராஜா, இளங்குமரன் மற்றும் மாநகரசபை வேட்பாளர் கபிலன், வட மாகாண தொழில் முனைவோர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்தக் கலந்துரையாடல் நிறைவில், பிரதமர் ஹரிணி அமரசூரியவின் யாழ்ப்பாணத்துக்குக்கான விஜயம் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சர்ச்சைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், அவை குறித்து எதுவும் தனக்குத் தெரியாது என அமைச்சர் பதிலளித்துவிட்டுச் சென்றார்.

# வடக்கில் குறுகிய காலத்தில் உருவாகும் மூன்று முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்

## முதலீடு செய்ய அழைக்கின்றார் யாழ் வணிகர் கழகத் தலைவர்




(எஸ்.நிதர்ஷன்)

மிக குறுகிய காலகட்டத்தில் வடமாகாணத்தில் அமையவுள்ள மூன்று முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் வடமாகாணத்தை சேர்ந்த புலம் பெயர்ந்த முதலீட்டாளர்களை முதலீடுகளை மேற்கொள்ளுமாறு யாழ் வணிகர் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ் வணிகர் கழக அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே யாழ் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வட மாகாணத்திலுள்ள காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை வளாகம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வளாகம், மாங்குளம் நகர அபிவிருத்தி வளாகம் ஆகிய 3 இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமையவுள்ளன.

விவசாயம் சார் பெறுமதிசேர் தொழிற்சாலைகள், மீன்பிடி சார் பெறுமதி சேர் தொழிற்சாலைகள், மின்சார உபகரணங்கள், தொழிற்சாலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், கடதாசி சார் உற்பத்திப்பொருள்கள், மருத்துவ உபகரணங்கள், ஆடைத் தொழிற்சாலைகள், இரசாயனம் சார் உற்பத்திப் பொருள்கள் உள்ளிட்ட இலங்கையில் தடை செய்யப்படாத பொருள்களை தயாரிக்க முடியும்.

இந்த முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் நீர்வழங்கல், கழிவுநீர் முகாமைத்துவம், உள்ளக வீதி வசதிகள், மின்சார வசதிகள் என்பன கிடைக்க வசதி செய்யப்படும்.

இதற்கு மேலதிகமாக முதலீட்டு ஊக்குவிப்பாக முதலீட்டுக் கழிவு ரிமை 200 வீதம் வழங்கப்படும். இது ஏனைய பகுதிகளில் 100 வீதமாக உள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் 30 வருட குத்தகைக்கு வழங்கப்படும். இது பொதுவான நடைமுறை. தேவையைப் பொறுத்து இதனை நீடித்துக் கொள்ளலாம்.

தொழிற்சாலைகளுக்கு தேவையான அனுமதிகளை முதலீட்டு சபை ஒழுங்கமைத்து வழங்கும்.

தொழிற்சாலைகளுக்கு தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள், தளபாடங்கள், கட்டட நிர்மாணத்திற்கு தேவையான பொருழ்கள் போன்றவற்றிற்கு இறக்குமதி தீர்வை விலக்களிக்கப்படும். ஏற்றுமதி நோக்கிலான தொழில் முயற்சிகளுக்கு தேவையான மூலப்பொருட்களை தீர்வை இன்றி இறக்குமதி செய்யலாம்.

எனவே மிக குறுகிய காலகட்டத்தில் வடமாகாணத்தில் அமையவுள்ள 3 முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் வடமாகாணத்தை சேர்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் வடமாகாணத்தை சேர்ந்த புலம் பெயர்ந்த முதலீட்டாளர்களை இந்த 3 வலயங்களிலும் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கிறோம்.

இதன் மூலம் வடமாகாணம் பொருளாதார ரீதியாக முன்னேறவும், தேசிய ரீதியாக எமது உற்பத்தியின் பங்களிப்பை அதிகரித்து கொள்ள முடிவதுடன் வடமாகாணத்தில் அதிகளவானோருக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஏதுவாக அமையும்.

மேற்படி பிரதேசங்களில் சர்வதேச தரத்தில் அமையவுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் தமது விண்ணப்பங்களை இலங்கை முதலீட்டு சபைக்கு சமர்ப்பிக்க முடியும். ஆகவே இந்த வருட இறுதியில் இந்த மூன்று வலயங்களும் உருவாக இருப்பதனால் விரைவாக விண்ணப்பிக்குமாறு யாழ் வணிகர் கழகம் முதலீட்டாளர்களை கோருகின்றது.

இது தொடர்பாக மேலதிக விவரங்களை 021 222 1336, +9477 777 6606, மின்னஞ்சல் - jeyamanonr@boi.lk, முகவரி - சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர், இலங்கை முதலீட்டு சபை, வட மாகாண காரியாலயம், NHDA கட்டடிம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் மூலமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இது பொருளாதார ரீதியாக கிடைக்கும் நல்ல சந்தர்ப்பம். இதனை முதலீட்டாளர்கள் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பில் மேலதிக விவரங்களை பெறுவதற்கு யாழ் வணிகர் கழகத்தை தொடர்புகொள்ளலாம் - என்றார்.

# தமிழர்க்கு நீதியை வழங்காது அரச அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி துஷ்பிரயோகம் செய்கிறது

## அமைச்சர் சந்திரசேகரனுக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் பதிலடி

தேர்தல் சட்ட விதிகளுக்கும் எமது மக்களின் சமய விழுமியங்களுக்கும் மதிப்பளிக்காது அரசாங்கம் என்ற அதிகாரப்போக்கில் தேசிய மக்கள் சக்தி செயற்படுகின்றது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் குற்றஞ்சாட்டினார்.

நீர்வேலியில் பிரதமர் கலந்து கொண்ட பிரசார மேடையில் தன் தொடர்பில் பெயர் குறிப்பிட்டு நீண்டதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்த குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நீர்வேலி வாய்க்கால் தரைப் பிள்ளையார் கோவில் முற்றத்தில் கோவிலின் முகப்பை மறைத்து மேடை அமைத்து, தேசிய மக்கள் சக்தி பிரசாரக் கூட்டத்தினை நடத்தியது. அப்பிரசாரம் தேர்தல் சட்ட விதிமுறை மீறல் என்பதை நேரில் தேர்தல் முறைப்பாட்டு அலுவலர்கள் முன் சுட்டிக்காட்டினேன். அதுபற்றிய முறைப்பாடுகளையும் மேற்கொண்டேன். சட்ட, சம்பிரதாய மற்றும் எமது சமய ஒழுக்க் விதிகளின் அடிப்படையில் ஆலய வளாகத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை எந்தக் கட்சியும் மேற்கொள்ள முடியாது. வீதியால் செல்பவர்கள் கூட கோவிலை தரிசித்துச் செல்ல வேண்டும். ஆகவே கோவிலை மறைத்து அரசியல் பிரசாரம் செய்வது என்பது எம்மை அதிர்ப்திக்குள்ளாக்குகின்றது. இவையே நாம் எதிர்ப்பை மேற்கொள்ளக் காரணம்.

தேர்தல் முறைப்பாடுகளையடுத்து தேர்தல் அதிகாரிகள் கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல்களை அரசாங்கம் என்ற அதிகார மமதையிலேயே பிரதமர் தலைமையிலானவர்கள் மீறினர். அச் சட்ட மீறலுக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்கினர். அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தியை நாட்டிலுள்ள தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் கட்டுப்படுத்த முடியாதுள்ளனர் என்பதுவே நடைமுறையில் நிதர்சனமாகவுள்ளது.

நான் இவ்விடத்தில் தலையிட்டமை தொடர்பில், பெயர் குறிப்பிட்டு அமைச்சர் சந்திரசேகரன் அவர்களால் மேடையில் பகிரங்கமாக விமர்சிக்கப்பட்டிருந்தேன். இங்கு கூறப்பட்ட விமர்சனத்திற்கு பதிலளிக்குமுகமாக ஒரு சிலவற்றையாவது நான் குறிப்பிட்டாக வேண்டியுள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்களையும் அரசியல் அராஜகங்களையும் மேற்



கொண்ட போது எதிர்த்துச் சொல்லிலும் செயலிலும் இயங்கியுள்ளேம். அதற்காக இன்றும் எனக்கு எதிரான வழக்குகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக நிலுவையில் உள்ளன. எமது மக்களை இராணுவ அதிகாரம், திணைக்கள அதிகாரம் கொண்டு அடக்க முற்பட்ட போதும் நாம் போராடியுள்ளோம். எவரினதும் அச்சுறுத்தல்களுக்கும் நாம் அஞ்சமுடியாது. ராஜபக்ஷக்கள் எம் மக்கள் மீது தொடர்ச்சியாக ஒடுக்குமுறையை பிரயோகித்தனர். ஒருகட்டத்தின் பின்னர் அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலான கட்சியும் அரசாங்கத்திற்கு வெளியே நின்று ராஜபக்ஷக்களை எதித்தார்கள். தங்கள் கட்சியின் கொள்கைக்கும் எமது தமிழ்த் தேசிய கொள்கைக்கும் வேறுபாடு காணப்பட்ட போதும் அரச அடக்குமுறையை தாக்குப் பிடிப்பதற்காக கொழும்பில் செயற்பாட்டாளர்களாக நாம் தொடர்புகளைப் பேணவேண்டியிருந்தது.

போரின் போதும் போரின் பின்பாகவும் இராணுவமயமாக்க சூழலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் உயிர் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது நாம் தமிழ்த் தேசிய நிலைப்பாடு உடையவர்களாகவும் நீங்கள் இடதுசாரி நிலைப்பாடு உடையவர்களாகவும் இணைந்து போராடினோம். இது தங்களுடன் மட்டுமல்ல. அரச அடக்குமுறைக்கு எதிரான உணர்வில் இருந்த பல சிங்கள, முஸ்லிம் தலைவர்களுடனும் செயற்பாட்டாளர்களுடனும் ஊடாட்டத்தினை நான் பேணியுள்ளேன். இந்த ஊடாட்டம் ஆட்சி மாற்றம் மட்டுமல்ல. அரசொன்றின் இனவாதத்தினை வெளிப்படுத்துவதாகும். மனித உரிமைகள் ரீதியில் தொடர்பு படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்கள் ஆட்சிக்கு வருவீர்கள் என நான் கனவிலும் நினைக்கவில்லை. நீங்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் எனக்கு பேச அவசியம் ஏற்படவில்லை. ஆனால் ஆட்சிக்கு வந்த நீங்கள் எமது மக்கள் மீதான ஒடுக்கமுறைக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அரசியல் தீர்வு ரீதியில் பொறுப்புச் சொல்வதுடன் நிரந்தர தீர்வையும் முன்வைக்கப்பொறுப்புடையவர்கள் என்பதை அவதானிக்கின்றோம்.

நீங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் அரச ஒடுக்குமுறைக்கு எதிராக கொண்டிருந்த நிலைப்பாடுகளில் இருந்து ஆட்சிக்கு வந்த பின்னர் தடம்மாறி பயணிக்கின்றீர்கள். தமிழ் மக்களுக்கான தீர்வு நிலைமையை சகஜமாக்குதல் என்ற மக்களை சகித்து வாழுதல் என்ற உத்திக்குள் தள்பவர்களாக உள்ளீர்கள். உண்மைக்குப் புறம்பான தேர்தல் வாக்குறுதிகளையும் தகவல்களையும் கூறுகின்றீர்கள். தமிழ்த் தேசிய இனத்தின்மீதான அடக்குமுறைகளுக்குத்தீர்வை வழங்க மறுக்கின்றீர்கள். நான் எமது மக்களுக்கு எதிராக அரசு மேற்கொண்ட பாரதூரமான மனித உரிமை மீறல்கள் குறித்த சாட்சியங்களைப் பதிவு செய்வதில் கூட தங்களுடன் இணைந்து பணியாற்றினேன். இவ்வாறாக எல்லாவற்றினையும் அறிந்த நீங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு அரசாக தங்கள் பொறுப்புச் சொல்லாது காலத்தைக் கடத்துகின்றீர்கள்.

அரச ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வு எம்மை ஒரு புள்ளியில் அன்று அரசியலுக்கு அப்பால் இணைத்தது. அமைச்சர் சந்திரசேகரன் ஊடாக லலித் மற்றும் குகன் தோழர்களும் எனக்கு அறிமுகமாகினர். ஏன் ஜனாதிபதி அநுர கூட அரச ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பு ஊடகப்பணி நிமிர்த்தமாக தொடர்பிலிருந்தவர். வலிகாமம் கிழக்கில் ஆவரங்காலில் வைத்து அரச படைகளால் கடத்தப்பட்டமைக்கான நீதி மன்ற சாட்சியமாக முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்கல உள்ளர். ஏன் இன்னும் நடவடிக்கை இல்லை? காணாமலாக்கப்படுதலில் படையினர் காட்டிக்கொடுக்கப்பட்டு விடுவர் என அரசாங்கம் அஞ்சுகின்றதா?

வரலாற்று ரீதியில் தமிழ் மக்களாகிய நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம். நீங்கள் இனவாதத்தை ஒழிப்பதாக சொன்னீர்கள். சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதாக சொன்னீர்கள். அரச அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி என்றீர்கள். பெரும் வெற்றியைச் சந்தித்துள்ள தங்கள் அரசாங்கம் இவற்றை செயற்பாட்டில் காட்டாது தற்போது செல்வாக்கிழந்துள்ள நிலையில், அதுபற்றிக் கேள்வி எழுப்பும் எம்மையும் நடவடிக்கையினையும் குறைத்த மதிப்பிடக்கூடாது எனக் கேட்டுக்கொள்கின்றேன். - இவ்வாறு முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.




# தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவில் களை கட்டிய வியாபாரம்

(கி.வசந்தன்)

தமிழ் – சிங்களப் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு வவுனியாவில் வியாபாரம் களை கட்டியுள்ளது. நகரில் பகல் நேரத்தில் அதிக சனநெரிசல்களையும் அவதானிக்க முடிகிறது.

2025 ஆம் ஆண்டு தமிழ் – சிங்களப் புத்தாண்டுப் பிறப்பு நாளை திங்கள் கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அதனை கொணடாடும் முகமாக வவுனியா நகரிற்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், வெடிகள், இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்கின்றமையை அவதானிக்க முடிந்தது.

கடந்த வருடத்தை விட இம்முறை புத்தாண்டு வியாபாரம் களை கட்டியுள்ளதுடன், மக்கள் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு ஆர்வத்துடன் தயாராகி வருகின்றமையையும் அவதானிக்க முடிந்தது.













# வக்பு சட்டத்துக்கு எதிராக மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் கலவரத்தில் 2 பேர் உயிரிழப்பு



வக்பு திருத்த சட்டத்துக்கு எதிராக மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத்தில் உள்ள சம்சர்கஞ்ஜில் ஏற்பட்ட வன்முறையில் இரண்டு பேர் உயிரிழுந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு மத்தியில் ஏற்பட்டுள்ள வன்முறை மோதல்களால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த வன்முறை தொடர்பாக எதிர்க்கட்சியான பா.ஜ.க. குற்றம்சாட்டியதைத் தொடர்ந்து, வக்பு திருத்தச் சட்டம் மேற்கு வங்கத்தில் அமல்படுத்தப்படாது என்று தெரிவித்திருக்கிறார்.

இதனிடையே முர்ஷிதாபாத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட கலவரம் தொடர்பாக 118 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், வன்முறையில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்” என்று தெரிவித்தார்.

கலவரம் குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள மாநில முதல்வர் மம்தா, “ஒவ்வொரு மனித உயிரும் விலைமதிப்பற்றது, அரசியலுக்காக கலவரங்களைத் தூண்டிவிடாதீர்கள். கலவரம் செய்பவர்கள் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கிறார்கள்.

வக்பு சட்டத்தை நாங்கள் உருவாக்கவில்லை. இந்தச் சட்டத்தை மத்திய அரசு இயற்றியது. எனவே, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், தாங்கள் விரும்பும் பதிலை மத்திய அரசிடமிருந்துதான் பெற வேண்டும்.

இந்த விஷயத்தில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம் - இந்த சட்டத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்தச் சட்டம் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்படாது. அப்படி இருக்க, இந்தக் கலவரம் எதற்கானது? கலவரத்தைத் தூண்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். நாங்கள் எந்த வன்முறைச் செயலையும் மன்னிப்பதில்லை.” என்று தெரிவித்துள்ளார்.

மேற்குவங்கத்தின் சில பகுதிகளில் வக்பு சட்டத்துக்கு எதிராக நடந்த போராட்டங்கள் பதற்றத்தை ஏற்படுத்தியது. வன்முறையாளர்கள் வாகனங்களுக்குத் தீ வைத்தனர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கலவரக்காரர்களைக் கட்டுப்படுத்த முயன்றதில் சில பொலிஸார் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், “வெள்ளிக்கிழமை தொழுகைக்கு பின்பு முஸ்லிம்கள் ஒன்று கூடி வக்பு சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்தியதால் பதற்றம் ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சம்சர்தஞ்சிலுள்ள டாக்பாங்லோவிலிருந்து சுதிர் சஜ/ர் மோர் இடையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை 12-ஐ மறித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒரு பொலிஸ் வாகனத்தின் மீது கற்களை எறிந்ததில் போராட்டம் வன்முறையாக மாறியது. இந்த கலவரத்தில் 10 பொலிஸார் காயம் அடைந்தனர். கட்டுக்கடங்காக கூட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் தடி அடி நடத்த வேண்டி இருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வெடி குண்டு போன்ற பொருளை வீசியதால் பொலிஸார் கண்ணீர் புகைகுண்டை பயன்படுத்த வேண்டி இருந்தது” என்று தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை நடந்த வன்முறை முர்ஷிதாபாத்தின் துலியன் பகுதி வரை பரவியது. இங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். இதனிடையே மேற்கு வங்க பா.ஜ.க. தலைவர் சுகந்த மஜும்தார், திரிணமூல் காங்கிரஸ் அரசு முர்ஷிதாபாத்தில் சட்டத்தின் ஆட்சியை அமல்படுத்தி அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக பா.ஜ.க. தலைவராக நயினார் நாகேந்திரன் தேர்வு

## அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு



தமிழக பா.ஜ.கவின் புதிய மாநில தலைவராக அக்கட்சியின் சட்டப்பேரவைக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பா.ஜ.க. தேசிய பொறுப்பாளர்கள் கிஷன் ரெட்டி மற்றும் தருண் சுக் ஆகியோர், அதற்கான சான்றிதழை நயினார் நாகேந்திரனுக்கு வழங்கினர்.

பா.ஜ.கவில் மாநில தலைவர் மற்றும் தேசிய பொதுக்குழு உறுப்பினர்கள் பதவிக்கு தேர்தல் நடத்தும் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த பதவிகளுக்கு போட்டியிடுவோர் நேற்று முன்தினம் மாநில தலைமை அலுவலகமான கமலாலயத்தில் விருப்பமனு தாக்கல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, சட்டப்பேரவைக் குழு தலைவர் நயினார் நாகேந்திரன் மாநிலத் தலைவர் பதவிக்கு விருப்பமனு தாக்கல் செய்திருந்தார்.

மாநில தலைவர் பதவிக்கு நயினார் நாகேந்திரன் மட்டுமே மனு அளித்திருந்ததால் அவர் தமிழக பா.ஜ.க. தலைவராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். இதற்கான பதவியேற்பு நிகழ்ச்சி, சென்னை வானகரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பா.ஜ..க தேசிய பொறுப்பாளர்கள், கிஷன் ரெட்டி, தருண் சுக், மாநில பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நயினார் நாகேந்திரன், த.மி.ழ.க. பாஜகவின் புதிய தலைவராக அறிவிக்கப்பட்டு, அவருக்கான சான்றிதழை பா.ஜவின் தேசிய பொறுப்பாளர்கள், கிஷன் ரெட்டி, தருண் சுக் ஆகியோர் வழங்கினர்.

பா.ஜ.க மாநில பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, நயினார் நாகேந்திரனுக்கு துண்டு அணிவித்து, பிரசாதம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பாஜக சார்பில் 67 கட்சி மாவட்டங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.04.2025




நீங்கள் நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும். வீட்டை புனரமைத்தல் பற்றி இருவரும் கலந்தலோசிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சிறந்த வகையில் சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம் தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.




நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டிற்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதற்றத்துக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.




உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தை மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீக சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.




தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவர்க்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு அதிர்ஷ்டம் காரணமாக ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.04.2025




இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடையமாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவா இராமசாமி மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்



(றிஸ்வான் சாலிஹூ)

ஆர்.ஜே. மீடியா வலையமைப்பு 'முயற்சிக்கு என்றும் முதலிடம்' என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் 10 துறை சார்ந்தவர்களை இனம் கண்டு அவர்களை கௌரவப்படுத்தி வருகின்றது. அதன் ஓர் அங்கமாக ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கான மகுட விருது வழங்கும் வரிசையில் 'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான சிவா இராமசாமி கடந்த வெள்ளிக்கிழமை இந்த மகுட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'தமிழன்' பத்திரிகையின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், மகுட விருதினை ஆர்.ஜே. ஊடக வலையமைப்பின் பணிப்பாளரும், வானொலி அறிவிப்பாளருமான ஏ.எம். இன்ஷாப் வழங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.